JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 16 | Issue: 06 | August 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



நன்றாக நேசிக்கும் நண்பர்களே,

சில நேரங்களில் எதிரிகளாக மாறுவார்கள்.

ஆனால், தன் ஜீவனையேக் கொடுத்த இயேசுவே நமக்கு

# நல்ல நண்பன்

# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

## உள்ளே...


04



12



26



இப்பத்திரிக்கையைக் குறித்தான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.



அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
**Phone: 04639-353333 | Cell:9750955547**
**E-mail: youth@jesusredeems.org**
**www.jesusredeems.com | youth.jesusredeems.com**

# தலைவாசல்



எனக்கு அன்பான வாலிபர்களே!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

வாலிபர்களாகிய நீங்கள் பலவான்கள் என்பதை மறக்க வேண்டாம். வேதத்தில் உள்ள ஒவ்வொரு வாலிபர்களையும் தேவன் பலப்படுத்திப் பலவான்களாய் பயன்படுத்தினார். அந்த வகையில் தேவன் பயன்படுத்திய இரண்டு பலவான்களில் ஒருவன் தாவீது மற்றும் அவன் நண்பனான யோனத்தான். இருவரும் மிகவும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். இவர்களுடைய நட்பு அநேகருக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. யோனத்தான் தான் அடுத்த இராஜா என்ற போதிலும் தாவீதை அதிகமாய் நேசித்தபடியால், சுயநலம் இல்லாமல் தேவ சித்தத்திற்காகத் தன்னை விட்டுக் கொடுத்து அர்ப்பணித்தான். தாவீதை அதிகமாக நேசித்தபடியால் இராஜ குமாரனாகிய யோனத்தான், தன்னுடைய ராஜ வஸ்திரத்தையும், பட்டயத்தையும், சால்வையையும், வில்லையும், கச்சையையும் தாவீதுக்கு அன்புடன் கொடுத்தான். இவை எதைச் சுட்டிக் காட்டுகின்றது என்றால்,

ஒரு ராஜாவுக்குத் தேவையான அனைத்தையும் தாவீதுக்கு உடுத்தி, அவனை ராஜாவாக்கி அழகு பார்க்கிறான் யோனத்தான். தாவீதை காப்பாற்றுவதற்காகத் தன் தகப்பனின் கோபத்தையும், வெறுப்பையும் சம்பாதித்தான். தாவீதுக்கு முழு பாதுகாப்பாக இருந்தான். சவுல் தாவீதை கொல்ல முழு மூச்சாக இருந்த போதும் யோனத்தான் நடுநின்று ஒவ்வொரு முறையும் வாதாடி, "தாவீது நல்லவன், உத்தமன்" என்று சொல்லிக் கொண்டே இருந்தான். நட்புக்கு மிகச் சிறந்த இலக்கணம் யோனத்தான் என்றால் மிகையாகாது. தன் விருப்பத்தையும், தன் ஆசையையும், தனக்கு வரவேண்டிய அனைத்து மேன்மையையும் தள்ளி வைத்து விட்டு, ஒரு நல்ல நண்பனாகத் தாவீதுக்கு இருந்தான். இப்படியும் நட்பு உள்ளது.

ஆனால் இன்றைய சூழலில் நட்புக்காகச் சண்டைகளும், நட்புக்காகக் கொலை முயற்சிகளும் அரங்கேறுவதை செய்தித்தாளில் பார்க்கின்றோம். உலகத்தில் காணப்படுகிற நட்புகளில் சுயநலமும், வஞ்சகமும், சூழ்ச்சியும் தான் இருக்கிறது.

இயேசு இல்லாத எந்த உறவும் பிரச்சனையிலும், தோல்வியிலும், வேதனையிலும் தான் முடியும். இயேசு உன் நண்பனாக இருக்கும்போது, யோனத்தான் தாவீதுக்கு நண்பனாக இருந்ததை போல், இயேசு உனக்கும் ஒரு சிறந்த நண்பனாக இருக்க முடியும். உன் நட்பில் சுயநலம் இருக்காது. தேவ சித்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். தேவனுக்கு பிரியமாக நடக்க வேண்டும் என்ற தேவ பயம் இருக்கும்.

எனவே, நல்ல நண்பன் இயேசுவைப் போல் நீயும் பலர் எழும்ப ஒரு ஊன்று கோலாய் இரு!

பலர் உயரத்தில் ஏறிச் செல்ல நல்ல ஒரு ஏணியாய் இரு!

அநேகர் நல்வழியில் நடக்க நீ ஒரு பாலமாக இரு!



உன்னுடைய நட்பின் நிமித்தம் பலர் பயனடைய வேண்டும், மாறாகப் பாதிக்கப்பட கூடாது.

பிறர் உயர்வுக்கும் மேன்மைக்கும் நீ காரணமாக இருக்க வேண்டும்.

நீ எழும்பினால் பலர் எழும்புவார்கள். வாலிப சமுதாயத்திற்கு ஒரு சவால் விடும் உன்னைப் போன்ற வாலிபர்கள் தேவை.

**இயேசு கிறிஸ்துவில்** பெலப்படு! புறப்படு! ஜெயம் பெறு!!

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

# 97 நாட்கள் காத்திருந்த வாலிபன்




சாட்சி தொகுப்பு: காட்வின்

**பரபரப்பான காலை நேரத்தில் ஓசூரில் சகோதரர் ஜீடா பென்னிஹின் அவர்களின் வீட்டை அடைந்தோம். அவர் ஒரு கோடி ஆத்துமாக்களுக்காக ஜெபித்து ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தார். எங்களை யார் என்று தெரியாமலேயே மிகவும் அன்புடன் வரவேற்றார். எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். Coffee அருந்திக் கொண்டே பேச ஆரம்பித்தோம். என்ன ஒரே suspenseஆக இருக்கிறதா? நாங்கள் அவருடன் பேசின உரையாடல் இதோ உங்களுக்காக...**

## ஹலோ அண்ணன்! உங்களது குடும்பத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?


நான் இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்தேன். எனது தகப்பனார் எனது பாட்டியின் வயிற்றில் கருவுற்ற நேரத்தில் அவருடைய வீடு முழுவதும் பாம்புகள் மற்றும் பாம்பு புற்றுகள் இருக்குமாம். அவர் பிறந்தபிறகு என் தகப்பனாரைப் படுக்க வைத்திருக்கும் தொட்டிலைச் சுற்றிலும் பாம்புகள் படுத்துக் கொண்டிருக்குமாம். அதனால் என் தகப்பனாருக்கு நாகராஜ் என்று பெயர் வைத்தார்கள். என் தாயார் ஆஞ்சிமா, அவர்கள் ஒரு ஆஞ்சநேயர் பக்தர். எனது மூத்த சகோதரி லட்சுமி, சின்ன சகோதரி சரஸ்வதி, எனது அண்ணன் ஐயப்பன், எனது பெயர் முருகன். இது தான் எனது குடும்பம். ஒவ்வொரு வருடமும் தீ மிதிப்பது, அலகு குத்திக்கொள்வது, செருப்பு இல்லாமல் மலைகளுக்கு ஏறுவது, ஓசூரிலிருந்து பழனிக்கு காவடி எடுத்துக்கொண்டு செல்வது, எங்கள் கோயிலில் கும்பாபிஷேகம் செய்வது என்று எங்களது பெற்றோர் எங்களை மிகவும் பக்தியில் வளர்த்தார்கள்.





## உங்களது படிப்பு மற்றும் இளமைப் பருவம்பற்றிச் சொல்லுங்களேன்?

நான் சிறு வயதிலிருந்தே ஒரு கிறிஸ்தவப் பள்ளிக் கூடத்தில் தான் படித்து வந்தேன். 6ஆம் வகுப்பு படிக்கும்போதே, தவறான நண்பர்களுடன் பழக்கம் ஏற்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாகச் சிகரெட் பிடிக்கவும், மது குடிக்கவும் ஆரம்பித்தேன். ஒருநாள் சுடுகாட்டில் நின்று மது அருந்திக் கொண்டிருக்கும்போது, நான் ஒரு பிசாசினால் தாக்கப்பட்டேன். அது எப்பொழுது எனக்குள் வர ஆரம்பித்ததோ, அன்று முதல், இரவும் பகலும் என்னோடு பேச ஆரம்பித்தது. என் படுக்கை அறையில் ஒரு பாம்பு என்னைச் சுற்றி படுத்துக் கொண்டிருக்கும். திடீரென்று படம் எடுத்து, என்னோடு பேசும். கண்ணைத் திறந்து தத்ரூபமாய் அந்தச் சர்ப்பத்தைப் பார்ப்பேன். அதன் சத்தம் என்




காதுகளில் கேட்கும். இதனால் School first வாங்கின நான், படிக்க முடியாமல் மிகவும் குறைந்த மதிப்பெண்களே எடுக்க ஆரம்பித்தேன். ‘‘நான் உன்னைப் பைத்தியக்காரனாக்குவேன்’’ என்று என்னோடு பேசும். பள்ளிக்கு நடந்து போய்க் கொண்டிருக்கும்போது, திடீரென்று, சூரியனிடம், மரங்களிடம், செடிகளிடம் பேசுவேன். பள்ளிக்கூடத்திற்குப் போனால் திடீரென்று ஓடுவேன், யாரையாவது தாக்குவேன், ஆசிரியரை அடிப்பேன், கெட்ட கெட்ட வார்த்தையால் பேசுவேன் என்பதால், ஆசிரியர் எனது கையை ஜன்னலில் கட்டி வைப்பார். இனி கொஞ்ச காலம் தான் உயிரோடு இருப்பேன், எனவே உயிரோடு இருக்கும் வரைக்கும் சந்தோஷமாக இருக்கலாம் என்று நினைத்து, அதிகமான மது, சிகரெட், கஞ்சாவுக்கு அடிமையானேன். எனது சரீரம் முழுவதும் பச்சைக் குத்திக்கொண்டு, அசுத்த வாழ்க்கை வாழத் துவங்கினேன். இரவு நேரங்களில் தெரு தெருவாய் நடப்பேன், கஞ்சா அடிப்பதற்கு பணம் இல்லாமல், வாகனங்களைத் திருடி விற்பேன். இதனால் நான் என் வீட்டில் இருந்ததை விடப் போலீஸ் ஸ்டேஷனில் தான் அதிக நாட்கள் இருந்தேன். இப்படி, ஒரு வருடம் என் வீட்டிற்குக் கூடப் போகாமல் பைத்தியக்காரனைப் போல அலைந்துத் திரிந்தேன்.

**உங்கள் பள்ளிப் பருவமே மிகவும் பயங்கரமாக இருக்கிறதே! உங்களுடைய வாலிப வயதில் என்ன நடந்தது? பாவ வாழ்க்கையை விட்டுவிட்டீர்களா?**

10ஆம் வகுப்பு படிக்கும்போது, தினமும் காலையில் கைப்பந்து (volleyball) விளையாடப் பள்ளிக்குப் போவேன். எங்கள் பள்ளியில் சபை ஆராதனை நடக்கும். ஒரு அண்ணன் தினமும் வந்து இயேசு நல்லவர், இயேசுவை ஏற்றுக் கொள் என்று சொல்லுவார்கள். அந்த அண்ணனிடம், ‘‘இயேசுவைப் பற்றி மட்டும் சொல்லாதீர்கள், வேறு எது வேண்டுமானாலும் சொல்லுங்கள்’’ என்று சொல்லுவேன். அதன்பிறகு, தினமும் ஒரு Puffs, ஜூஸ் வாங்கிக் கொடுப்பார். இயேசுவைப் பற்றிச் சொல்லவே மாட்டார். கிட்டத்தட்ட 3, 4 மாதங்கள் puffs, juice தான் எங்களுக்குச் சுவிசேஷமே. கடைசியாக ஒருநாள், ஒரு கூடுகை இருக்கிறது போகலாம் என்று அழைத்தார். எங்கு வேண்டுமானாலும் வருகிறேன், கிறிஸ்தவ ஆராதனைக்கு மட்டும் கூப்பிடாதீர்கள் என்று சொன்னேன். கடைசியாக 2012ஆம் வருடம் மே மாதம் 26ஆம் தேதி (எனக்கு 16 வயது) 3 நாள் முகாம் ஒன்றிற்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கு இரவு நடந்த கூட்டத்தில் போதகர் ‘‘இயேசுவை நான் முகமுகமாய் பார்க்கிறேன், பட்டயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்’’ என்று சொன்னார். இது எனக்குப் புதிதாக இருந்தது. நான் எத்தனையோ தெய்வத்திற்கு மாலைப் போட்டிருக்கிறேன், நெருப்பில் நடந்திருக்கிறேன் ஒரு தெய்வமும் என்னுடன் பேசவில்லை! இவர் யார்? எப்பொழுதும் பேசிக்கொண்டே இருக்கிறாரே என்று சொல்லி எனக்குள் ஒரு பெரிய கேள்வி. உண்மையாகவே இயேசு பேசினாரா? என்று அங்கிருந்தவர்களிடம் கேட்டபோது, அவர்களெல்லாரும் அவர் தான் இரட்சகர், அவர் தான் மீட்பர், அவர் தான் நமக்காக உயிரைக் கொடுத்தவர் என்று சாட்சி சொன்னார்கள்.




**உங்களுக்குள் வந்த அந்தக் கேள்வி நிரந்தரமாக இருந்ததா? நீங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டீர்களா?**

அந்தச் சாட்சிகளைக் கேட்டவுடன் என்னோடும் என்னுடைய தெய்வம் பேச வேண்டும் என்ற ஆசையில்

அந்த camp நடந்த schoolன் 5வது மாடியில் ஏறித் தெய்வத்தைக் கூப்பிட தொடங்கினேன். அந்த நேரத்தில் என் தெய்வம் வரவில்லை, மாறாகத் தினமும் என்னைப் பயப்படுத்தின அந்தப் பிசாசு, வலுசர்ப்பம் தான் வந்து நின்றது. எனக்கு அதிக பயம் வந்துவிட்டது. உன் ஜீவன் எடுக்கப்படுகிற நாள் வந்துவிட்டது என்று சொன்னவுடனே என் இதயத்தை யாரோ ஊசியில் குத்துவது போல் வலி, இதயத்தை அழுத்திப் பிழிவது போல் வேதனையாக இருந்தது. இன்னும் 2 நிமிடத்தில் சாகப் போகிறேன் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. நான் வணங்கின தெய்வங்களை எல்லாம் அழைத்தேன் எந்தத் தெய்வமும் பதில் தரவில்லை. வலி தாங்க முடியாமல், தற்கொலை செய்து கொள்ளலாம் என்று 5வது மாடியிலிருந்து குதிக்கப் போகும் நேரத்தில், என் கண்களுக்கு முன்பாக வானம் இரண்டாகப் பிளந்து, ஒரு பெரிய வெளிச்சம் உண்டானது. அந்த வெளிச்சத்திலிருந்து **''நானே மெய்யான தேவன், உனக்காகச் சிலுவையில் மரித்து உன்னை மீட்டெடுத்த இரட்சகர் நானே''** என்கிறதான ஒரு பயங்கரமான சத்தம் எனக்குக் கேட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்டு அப்படியே பின்னால் போய் விழுந்தேன். கிட்டத்தட்ட 3 மணி நேரம் என்னால் எழும்ப முடியவில்லை. 3 மணி நேரத்திற்கு பிறகு மறுபடியும், **''உனக்காகச் சிலுவை சுமந்து என் ஜீவனைக் கொடுத்து நான் உன்னை மீட்டு எடுத்தேன், என் ஊழியம் செய்ய நீ எனக்கு வேண்டும்''** என்று அந்தச் சத்தம் கேட்டது. நான் ஆண்டவரைப் பார்த்து **''நீர் எனக்காக ஜீவன் தந்தது உண்மையானால், என் ஜீவன் இருக்கும் நாளெல்லாம் உமக்காகவே நான் வாழ்வேன்''** என்று தேவனிடத்தில் என்னை அன்றைக்கு அர்ப்பணித்தேன்.

**சூப்பர்... முருகனாய் இருந்த உங்களிடம் தேவன் வந்து பேசினார்... உங்கள் குடும்பம் உங்களை ஏற்றுக் கொண்டார்களா?**

2012ஆம் ஆண்டு மே 27ஆம் தேதி இயேசு என்னைத் தேடி வந்து, என்னைப் புதிய சிருஷ்டியாக மாற்றினார். நான் என் அம்மாவிடம், ''இயேசு என்னோடு பேசினார்'' என்று சொன்னவுடன் என்னை அடித்து, ஏளனமாகப் பார்த்து, யாரோ உன்னை மதம் மாற்றி விட்டார்கள், அந்தத் தெய்வத்தை மறந்து விடு, நம்முடைய தெய்வத்தை ஆராதி என்று சொல்லி அடித்தார்கள். நான் அடி வாங்காத இடமே கிடையாது. எனக்குச் சபைக்குப் போக வேண்டும் என்று ஆசை, ஆனால் சபைக்குப் போக முடியாது. குளிக்கப் போனால் பாத்ரூம் கதவை மூடி விடுவார்கள். ஆனால் நான் கதவை உடைத்து விட்டு ஆராதனைக்கு செல்வேன். ஆராதனை முடிந்து வெளியே வரும்போது, எனது பெற்றோர் கையில் பிரம்போடு நிற்பார்கள். அடித்துத் தெரு தெருவாய் அழைத்துச் செல்வார்கள். எத்தனை அவமானங்களும் எதிர்ப்புகளும் வந்தபோதும், ஜீவனைக் கொடுத்த தேவனுக்காக எப்படியாவது வாழ்ந்து விட வேண்டும் என்று 16 வயது வாலிபனான எனக்கு ஒரு வைராக்கியம் உண்டானது. ஞாயிற்றுக்கிழமை எனக்குச் சாப்பாடு கிடையாது, இரவு 12 மணி ஆனாலும் நான் வெளியே தான் நிற்க வேண்டும். அதற்குப் பிறகு தான் என்னை வீட்டிற்குள் சேர்ப்பார்கள்.

எனக்குப் பைபிள் படிக்க வேண்டும் என்று மிகவும் ஆசை. ஆனால் வீட்டில் பைபிள் திறந்தால் என் தாயார் பைபிளை தூக்கி நெருப்பில் போடுவார்கள். என் கண் முன்பே பைபிளைக் கிழித்து விடுவார்கள். நான்



எல்லோரும் தூங்கின பிறகு இரவு 12 மணிக்குமேல் போர்வையை மூடிக்கொண்டு, பைபிளைத் திறந்து torch light வைத்துப் படிப்பேன். பைபிளை படிக்க வேண்டும் என்ற வாஞ்சையில் 3 நாட்களில் முழு வேதாகமத்தையும் படித்து முடித்தேன். எனக்கு ஜெபிக்கத் தெரியாது, எப்படி பைபிள் வாசிக்க வேண்டும் என்று தெரியாது, ஆலயத்தில் எல்லோரும் காணிக்கைப் போடும்போது எனக்குக் காசு இருக்காது. ஆனால் நானும் கையைக் காணிக்கைப் பெட்டிக்குள் போட்டு, என்னையேத் தருகிறேன் என்று சொல்லி என்னை அர்ப்பணிப்பேன்.

**கேட்கவே பயங்கரமாக இருக்கிறது... 16 வயதில் இவ்வளவுப் பாடுகளை அனுபவித்தீர்களே... உங்கள் கஷ்டங்கள் முடிந்ததா? இல்லை தொடர்ந்து வந்ததா?**

முடியவில்லை... 17 வயது வாலிபனான என்னிடம் ''இந்த வருடம் நீ மாலைப் போட வேண்டும்'' என்று சொன்னார்கள். இயேசு கிறிஸ்துவை தெய்வமாக

ஏற்றுக் கொண்ட என்னால் முடியாது என்று அம்மாவை எதிர்த்து நிற்க ஆரம்பித்தேன். எனது மாமா குடும்பமும், என் குடும்பமும் சேர்ந்து 17 வயது வாலிபன் என்று கூடப் பாராமல், என்னை அடித்து, **''நீ மாலைப் போட்டால் இந்த வீட்டில் இரு, இல்லையென்றால் இப்பொழுதே வீட்டை விட்டு வெளியே போ''** என்று அனுப்பி விட்டார்கள். 17 வயது வாலிபனாக, உடைகள் கிழிக்கப்பட்ட நிலையில் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டு, படுக்க இடம் இல்லாமல் பஸ் ஸ்டாண்ட், இரயில்வே ஸ்டேஷன், platformகளில் படுத்து உறங்கினேன். தினமும் காலையில் ஒசூரில் இருக்கும் Public Toilet சுத்தம் பண்ணினால் 200 ரூபாய் கிடைக்கும். செப்டிக் Tank சுத்தம் பண்ணினால் 100 ரூபாய் கிடைக்கும். வீட்டுக்கு வெளியே இருக்கும் புல்லைக் கொத்தி கொடுத்தால் 50, 20 ருபாய் என்று கொடுப்பார்கள். அதை வைத்துத் தான் நான் படித்தேன். ஒரு நாள் 2 நாள் கிடையாது 6 வருடங்கள் இது தான் என்னுடைய வேலையாக இருந்தது. இப்படி தான் என்னுடைய பள்ளிப் படிப்பு மற்றும் கல்லூரிப் படிப்பைப் படித்தேன். படுக்கத் தான் இடம் இல்லை என்று பார்த்தால் சாப்பாடும் கிடையாது. பிச்சைக்காரர்கள் என் நிலமையைப் பார்த்து அவர்களுக்குக் கொடுக்கும் சாப்பாடு பொட்டலத்தை எனக்குத் தருவார்கள். ஒரு பாக்கெட் மிச்சர் தான் எனக்கு 28 நாட்களுக்கான சாப்பாடாக இருந்தது. அதிகமாகச் சாப்பிட்டால் சீக்கிரம் காலியாகிவிடும் என்று கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டு தண்ணீர் குடிப்பேன். பள்ளி, கல்லூரி முடித்து வந்தவுடன் வனாந்திரமான இடத்திற்கு போய் முழங்கால்படியிட்டு, ஆண்டவரே இன்றைக்கு இந்த உலகம் என்னைப் பிச்சைக்காரன் என்று சொல்லலாம், Public toilet கழுவுகிறவன் என்று சொல்லலாம், அனாதை என்று சொல்லலாம், ஆனால், ஒருநாள் இந்த வேதத்தை நான் கரத்தில் எடுத்துக் கொண்டு எல்லா எல்லைகளிலும் 'கர்த்தரே தேவன்' என்று நிரூபிக்கிற தேவ ஊழியனாய் மாற வேண்டும் என்று 6 வருடம் ஜெபித்தேன். அந்த வேளையில் ''உமக்காகத்தானே நான் உயிர் வாழ்கிறேன், உம்மை தானே நேசிக்கிறேன்'' என்ற பாடலை என் இருதயத்தின் ஆழத்திலிருந்து பாடி பாடி ஆராதிப்பேன்.

> படுக்க இடம் இல்லாமல் பஸ் ஸ்டாண்ட், இரயில்வே ஸ்டேஷன், platformகளில் படுத்து உறங்கினேன்.

## கிறிஸ்துவுக்காக இவ்வளவு கஷ்டங்களையும் சகித்து, Toilet கழுவி +2 மற்றும் கல்லூரிப் படிப்பை முடித்த நீங்கள் வேலை பார்த்தீர்களா?

கர்த்தருடைய கிருபையால் **மெக்கானிக்கல் engineering படித்து முடித்தேன். கைநிறைய சம்பளத்துடன் நல்ல வேலையும் கிடைத்தது. என் குடும்பத்தார் என்னை ஏற்றுக் கொண்டார்கள்.** என் சம்பாத்தியம் என் குடும்பத்தின் தரத்தை உயர்த்தியது. அந்த நேரத்தில் என் இரட்சகர் என்னைத் தேடி வந்து, **''உன் குடும்பத்திற்காக வாழ, உன்னை நான் தெரிந்து கொள்ளவில்லை; நீ என் ஊழியத்தை செய்ய எனக்குத் தேவை''** என்று என்னோடு பேசினார். வேலையைத் தூக்கி எறிந்து விட்டு, அறைக்குள் சென்று ''ஆண்டவரே, நான் பைபிள் காலேஜ் படிக்கவில்லை, எனக்காக ஜெபிப்பதற்கு ஒரு ஆள் இல்லை, எப்படி பிரசங்கம் பண்ண வேண்டும்? எப்படி ஆராதிக்க வேண்டும்? எப்படி ஊழியம் செய்ய வேண்டும்? என்று எனக்கு எதுவுமே தெரியாது. நீர் தான் என்னைத் தெரிந்து கொண்டீர், உமக்காக நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கதறினேன்.

## இயேசு உங்களுடன் பேசினபின்பு நீங்கள் ஊழியம் செய்ய வந்தீர்களா? அதன்பின்பு உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை எப்படி இருந்தது?

அதன்பிறகு ஒரு தீர்மானம் எடுத்து ஜெபிக்க ஆரம்பித்தேன். நான் உங்களைப் பார்க்கும் வரை சாப்பிட மாட்டேன், பேசமாட்டேன், யாரையும் பார்க்கமாட்டேன், பார்த்தால் உங்களைத்தான் பார்க்க வேண்டும், கேட்டால் உங்க சத்தம் தான் கேட்க வேண்டும், அதுவரைக்கும் நான் காத்திருப்பேன் என்று சொல்லி அறையில் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஒருநாள், 2 நாள் 3 நாள், 5 நாள், 21 நாள், 40 நாட்கள் காத்திருக்கிறேன் இயேசு வரவில்லை. எந்த மனிதனையும் பார்க்காமல் புசியாமல் இரவும் பகலும் காத்திருந்தேன் 97வது நாள் இரவு,






பூட்டப்பட்ட அறையில் வெளிச்சமாய் சர்வ வல்லவர் உலாவத் தொடங்கினார். வெளிச்சத்திலிருந்து **"நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்"** என்று ஒரு சத்தம் வந்தது. எனக்கு வல்லமை, வரங்கள் வேண்டுமென்று நான் சொல்லப் போகும் நேரத்தில் என்னிடத்தில் வல்லமை வரங்களை கேட்காதே, **"ஆத்துமாக்களைக் கேள்"** என்று ஆவியானவர் சொன்னார். உடனே ஆண்டவரே **நான் மரிப்பதற்கு முன்பு, ஒரு கோடி ஆத்துமாக்கள் எனக்கு வேண்டும்** என்று கேட்டேன். 97வது நாளிலிருந்து இரவும் பகலும் 3 நாள் கர்த்தர் என்னோடு பேசினார். 2018 அக்டோபர் 21 அன்று முழுநேர ஊழியக்காரனாகத் தேவனே என்னைப் பிரதிஷ்டை செய்தார். இன்றைக்கு வரைக்கும் தேவன் கிருபையாக நடத்திக் கொண்டிருக்கிறார்.

**ஒரு கோடி ஆத்துமாக்கள் எனக்கு வேண்டும்**

## என்ன பாக்கியம், ஆண்டவரே பிரதிஷ்டை பண்ணி அனுப்பினார்... இப்பொழுது என்ன மாதிரியான ஊழியங்கள் செய்து வருகிறீர்கள்?

எந்தப் பிசாசுக்குப் பயந்து தற்கொலை செய்யப் போனேனோ, அந்தப் பிசாசுகளைத் துரத்துகிற அதிகாரத்தைத் தந்து தேசம் முழுவதும் பயன்படுத்தி வருகிறார். சபைகளைத் திடப்படுத்தவும் உயிர்ப்பிக்கவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். 2018 அக்டோபர் 21 அன்று தேவன் என்னோடு பேசின பிரதானமானது: (திண்டுக்கல் மாவட்டத்தை உனக்குத் தருவேன், உன் வெளிச்சத்தைத் தேடி இராஜாக்கள் வருவார்கள்). இங்கு ஊழியம் செய்யக்கூடாதபடிக்கு அநேக சத்துருக்கள் எழும்பி அநேகத் தடைகளைக் கொண்டுவந்த போதிலும், ஒரு சபையைக் கட்டி எழுப்பத் தேவன் உதவி செய்தார். இன்னும் அநேக சபைகளைக் கட்டி எழுப்ப ஜெபித்துக் கொள்ளுங்கள்... தேவனுக்காக எதையாகிலும் சாதிக்க வேண்டும் என்று வைராக்கியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.



## இன்றைய வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

யோவான் 9:1-3 வசனத்தின் படி; அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன்செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டு இப்படிப் பிறந்தான். அப்படியானால், நீங்கள் பிறந்தது தேவ திட்டமே! எஸ்தரைக் கொண்டு ஒரு கூட்டத்தை இரட்சிப்பதற்காக இராஜாத்தியாக்கினாரே அன்றி, அவள் பேர் புகழுடன் வாழ்வதற்காக அல்ல. அதுபோல் வாலிபர்களாகிய நீங்கள் இருக்கும் இடத்தில் தேவனுக்காக இயன்றமட்டும் எதையாகிலும் செய்யுங்கள். உபத்திரவத்தை சகித்து, வேதத்தில் பிரியமாயிருந்து, ஜெபத்தில் உறுதியாய் தரித்திருங்கள். ஒரே ஒரு வாழ்க்கை கிறிஸ்துவுக்காக வாழ்ந்து சாதிப்போம்! தேசத்தைச் சுதந்தரிப்போம்!

**அன்பான வாலிபர்களே! இயேசுவை அறியாத மிகவும் பக்தியுள்ள குடும்பத்தில் பிறந்த முருகனை இயேசு தேடிச் சென்று இரட்சித்து ஜீடா பென்னிஹின் ஆக மாற்றி, இன்றைக்கு ஒசூர் பகுதியில் "இயேசுவே ஆண்டவர்" என்ற ஊழியத்தை தந்து அவருக்காகச் சாட்சியாகப் பயன்படுத்தி வருகிறார். எவ்வளவு பாடுகள், வேதனைகள், காயங்கள், புறக்கணிப்புகள் வந்தபோதும் இயேசுவை விட்டுவிலகாமல், இயேசுவுக்காக வைராக்கியம் பாராட்டினதினால், ஒரு கோடி ஆத்தும தரிசனத்தைக் கொடுத்து, வல்லமை, வரங்களைக் கொடுத்துத் தேவன் நடத்தி வருகிறார். கர்த்தருக்கென்று வைராக்கியம் பாராட்டும்போது கர்த்தர் உங்களுக்காக வைராக்கியம் பாராட்டுவார்.**

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் நண்பர்களைக் குறித்ததாக இருக்கும். கேள்வியில் கேட்கப்பட்டிருக்கும் நபரின் நண்பர் யார் என்பதை கண்டுபிடித்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.


1) யார் தேவனுக்கு நண்பன் என்று கருதப்பட்டான்?
2) இரவு பகல் 7 நாட்கள் யோபுவுடன் தரையில் உட்கார்ந்திருந்த நண்பர்கள் யார்?
3) மணவாளனுடைய தோழனோ, ........... மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறேன் என்று சொன்னது யார்?
4) இயேசு கிறிஸ்துவின் மிக நெருங்கிய நண்பர்கள் மூன்று பேர் யார்?
5) எந்த அரசனும் ஆளுநரும் முற்காலத்தில் பகைவர்களாய் இருந்து பிறகு நியாய விசாரணையில் நண்பர்களாக மாறியவர் யார்?
6) பவுலுக்கு நண்பர்களாக இருந்த கணவன் மனைவி யார்?
7) பல வருடங்கள் ஒரு இராஜா தகப்பனுடனும், மகனுடனும் நண்பனாகவும் வியாபாரத்தில் தோழனாகவும் இருந்தான்?
8) தனக்கு இராஜாவிடமிருந்து மேல்பதவிக்கு உயர்வு வந்தவுடன், தனது 3 நண்பர்களுக்கு உயர்வு வேண்டுமென்று கேட்ட நபர் யார்?
9) ஆணையிட்டு நண்பர்களான இரண்டு பேர் யார்?
10) நண்பன்போல் நடித்து யோசுவாவை ஏமாற்றி, உடன்படிக்கை செய்தவர்கள் யார்?

### கடந்த மாத விடைகள்

1) இஸ்மவேல் (ஆதி. 16:11)
2) மெல்கிசேதேக்கு (ஆதி. 14:18)
3) ரெபெக்காள் (ஆதி. 25:21-24)
4) ஆபேல் (ஆதி. 4:2)
5) யோசேப்பு (ஆதி. 50:26)
6) ஆதாம் (ஆதி. 2:15)
7) ராகேல் (ஆதி. 29:9)
8) [illegible] (ஆதி. 36:24)
9) ஒத்னியேல் (நியா. 3:9,10)
10) கிதியோன் (நியா. 6:11)
11) ஆபிரகாம் (ஆதி. 14:20)
12) [illegible] (ஆதி. 19:3)
13) [illegible] (ஆதி. 4:19)
14) நிம்ரோத் (ஆதி. 10:8)
15) [illegible] (2 இராஜா. 12:9)

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.08.2025

BIBLE Treasure Hunt



**கடந்த மாத வெற்றியாளர்**

**அபி, சுரண்டை**

**அவர்களை வாழ்த்துகிறோம்.**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org



# கர்த்தர் உன்னோடு இருந்தால்!

செய்தி: மோகன் சி. லாசரஸ்

இஸ்ரவேலர் மீதியானியரால் அதிகமாகச் சிறுமைப்படுத்தப்பட்ட நாட்களில் வாழ்ந்தவன்தான் கிதியோன். மீதியானியரின் நிமித்தம் இஸ்ரவேலர் கர்த்தரை நோக்கி முறையிட்டனர். மீதியானியர் கையில் சிறுமைப்பட்டிருந்த இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்கத் தேவன் கிதியோனை தெரிந்தெடுத்தார். கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி கிதியோனிடம், **"பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்... உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ"** (நியா. 6:12) என்று கூறி அனுப்புகிறார். கர்த்தருடைய தூதன் கிதியோனிடம் அவன் தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி சர்வாங்க தகனபலி செலுத்த சொன்னபோது, கிதியோன் கர்த்தர் தனக்குச் சொன்னபடியே செய்தான். ஆனால் அவன் தன் தகப்பன் குடும்பத்தாருக்கும் அந்த ஊர் மனுஷருக்கும் பயப்பட்டபடியினால், அதைப் பகலில் செய்யாமல், இரவிலே செய்தான் (நியா.6:26,27). தன் தகப்பனின் பலிபீடத்தையே பகலில் தகர்த்துபோட பயந்த கிதியோனை, வெடுக்கிளிகளைப் போலப் பரவியிருந்த மீதியானியரை முறியடிக்கக் கர்த்தர் சொல்கிறார்.


கிதியோன் பயந்த சுபாவம் கொண்டவன். கர்த்தர் அவன் பயந்த குணத்தை நன்கு அறிந்தவராய், அவனிடம் நீ போகப் பயப்பட்டாயானால், முதலில் நீயும் உன் வேலைக்காரனாகிய பூராவும் சேனையினிடத்திற்குப் போய், அங்கே என்ன பேசுகிறார்கள் என்று கேள்: பின்பு சேனையிடத்திற்குப் போக, உன் கைகள் திடப்படும் என்றார் (நியா. 7:9-15). பயந்த சுபாவமும், பலவீனமான விசுவாசமுள்ளவனாயும் இருந்த கிதியோனை தேவன் தெரிந்தெடுத்து, அவனை விசுவாசத்தில் பலப்படுத்திப் பராக்கிரமசாலியாக மாற்றினார். இதனால் வெட்டுக்கிளிகளைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் பரவியிருந்த மீதியானியரை, கிதியோன் தேவனின் துணையோடு மிக எளிதாக முறியடித்தான். பயந்துக் கொண்டிருந்த கிதியோனைக் கொண்டு பெரிய இரட்சிப்பை தேவன் கட்டளையிட்டார். அம்மோனியரும், மீதியானியரும், அமலேக்கியரும், கிழக்கத்திப் புத்திரரும் சிதறடிக்கப்பட்டு சத்துருக்களை மடங்கடித்து தன்னுடைய தேசத்தை மீட்புக்கு கொண்டு வந்தான். உங்களைக் கொண்டும் தேவன் செய்ய வேண்டுமானால், உங்களை ஒப்புக்கொடுக்கும்போது, தேவன் உங்களைக் கொண்டும் நிறைவேற்றுவார்.





# கர்த்தர் உங்களோடு இருந்தால்...

## காரியசித்தி உண்டாகும்



**"கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான். கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு..."** (ஆதி 39:2,3). யோசேப்பு தனது வேலையிலும், தனது பரிசுத்தத்துக்கு சவாலான நேரங்களிலும், பாடுகளில் உழன்றபோதும், உயர்பதவிக்கு உயர்த்தப்பட்ட பின்னும் எப்போதும், எல்லா நேரங்களிலும் கர்த்தர் விலகாமல் தன்னோடு இருந்துக் கொண்டிருப்பதை அவன் அறிந்தவனாக இருந்தான். ஆகவே கர்த்தரை உறுதியாய் பற்றிக் கொண்டான். காரியசித்தி உள்ளவனானான். உங்கள் குடும்பத்தில், பிசினஸில், படிப்பில் நீங்கள் செய்யும் எல்லாவற்றையும் ஆண்டவர் வாய்க்கச் செய்ய வேண்டுமானால், ஆண்டவர் உங்களோடு இருக்க வேண்டும். அப்பொழுது இவை எல்லாவற்றிலும் காரியசித்தி உள்ளவர்களாக மாறுவீர்கள்.

## புத்திமானாய் மாறுவீர்கள்



தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடேகூட இருந்தார். அவன் மகா புத்திமானாய் நடக்கிறதைச் சவுல் கண்டு, அவனுக்குப் பயந்திருந்தான் (1சாமு.18:14,15). தாவீது, கோலியாத் என்ற பெரிய போர்வீரனை எதிர்கொள்ளும்போது, அவன் கவண் மற்றும் கற்களை மட்டுமே பயன்படுத்தி, புத்தியைக் கையாண்டு வெற்றி பெற்றான். சவுல் இராஜாவால் தாவீதுக்கு ஆபத்து ஏற்பட்டபோது, தாவீது புத்திசாலித்தனமாகக் கையாண்டு, தன்னைக் காப்பாற்றிக்கொண்டான். இஸ்ரவேல் நாட்டை ஆட்சி செய்தபோது, தாவீது புத்திசாலித்தனமாகவும், ஞானமாகவும் செயல்பட்டு, நாட்டை முன்னேற்ற நிலைக்குக் கொண்டு வந்தான்.

நீங்கள் படித்துக் கொண்டிருந்தால் அதற்கான புத்தியைத் தருவார். நீங்கள் பிசினஸ் செய்தால் புத்திமானாய் நடந்து கொண்டு காரியம் செய்ய ஞானம் தருவார். வேலை செய்து கொண்டிருந்தால் வேலையில் புத்திமானாய் நடந்து நீங்கள் ஜெயம் பெற உதவி செய்வார். இயேசு உங்களோடிருந்தால் உங்களுக்கு ஞானம், அறிவு, புத்தி அதிகமாக பெருகும். எதை செய்தாலும் புத்தியாய் செய்ததினால் தாவீதுக்கு ஜெயம் கிடைத்தது.

## மேன்மை உண்டாகும்



கர்த்தர் யோசுவாவை நோக்கி: நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு, இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன் (யோசுவா 3:7). தேவனுடைய கட்டளைகளுக்கும், வார்த்தைகளுக்கும், உண்மையாக செவிகொடுத்து, அதன்படி செய்வதற்கு ஒப்புக்கொடுத்து நடக்கும் போது தேவன் தம்முடைய வார்த்தையின்படியே மேன்மையடையச் செய்கிறார். மேன்மை என்பது தேவனுக்குப் பயந்து செய்யப்படும் செயல்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம். யோசுவா தேவனுக்குப் பயந்து தேவனுடைய வார்த்தைகளுக்கு செவி சாய்த்து, உண்மையும், நேர்மையுமாக செயல்பட்டபோது, தேவன் அதை எல்லா ஜனங்களுக்கும் முன்பாக அங்கீகரித்தார். இஸ்ரவேல் மக்களின் கண்களுக்கு முன்பாக மேன்மைப்படுத்தினார். கர்த்தர் உங்களோடு கூட இருந்தால் மேன்மையாக வைப்பார். உங்கள் படிப்பில் வேலையில், பிசினஸில் நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதில் மேன்மைப்படுத்தப்பட வேண்டுமானால், கர்த்தர் உங்களோடு கூட இருக்க வேண்டும். ஆண்டவர் உங்களோடு இருந்தால் தான் உங்களுக்கு மேன்மை கிடைக்கும்.

**அன்பான வாலிபர்களே! பயந்த சுபாவமும், விசுவாசத்தில் பெலவீனனுமாய் இருந்த கிதியோனோடு கர்த்தர் இருந்ததால் ஒரு பெரிய சேனையையே வீழ்த்த முடிந்தது. இன்றைக்கு தேவன் உங்களோடு இருந்தால் எவ்வளவு பெரிய கெர்ச்சிக்கிற சிங்கம் வந்தாலும் அதை முறியடிக்கத் தேவன் பெலன் தருவார்! அதற்கு உங்களை நீங்கள் ஒப்புக் கொடுக்க வேண்டும். எவ்வளவு பெரிய பிரச்சனை வந்தாலும் கர்த்தரை மட்டும் விட்டு விலகி விடாதீர்கள். கர்த்தர் உங்களோடு இருந்தால் மட்டும் தான் காரியசித்தி உண்டாகும். புத்திமானாய் நடந்து கொள்ள முடியும். யோசுவாவைப் போல் மேன்மை அடைய முடியும்.**

# நட்புக்கு வந்த சோதனை

ஆலோசனை: அஜி




அண்ணன் எனக்கு 28 வயது ஆகிறது. எனக்கு 3 நண்பர்கள் இருக்கிறார்கள். நாங்கள் ஒன்றாகப் பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பைப் படித்தோம். என் பெற்றோரும் அவர்களைத் தங்களது பிள்ளைகளாகவே பாவித்து வந்தார்கள். எனக்குக் காஞ்சனா என்கிற தங்கை இருக்கிறாள். அவள் B.E final year படித்துக் கொண்டிருக்கிறாள். Group -2 Exam எழுதி அரசு வேலையில் சேர வேண்டும் என்பதே அவளுடைய Aim. என் நெருங்கின நண்பன் கார்த்திக் 2 வருடங்களாக என் தங்கையைக் காதலிப்பதாகச் சொன்னான். இதைக் கேட்டதும் எனக்கு மிகுந்த அதிர்ச்சி. என் பெற்றோருக்குத் தெரிந்தால் குடும்பத்தில் பூகம்பமே வெடித்து விடும். அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். மேலும் எங்கள் நட்பு முறிந்துவிட வாய்ப்பு உண்டு. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கார்த்திக் தன் குடும்ப கஷ்டத்தின் நிமித்தம் வெளிநாடு சென்று சம்பாதித்து தன் குடும்பக் கடனை அடைக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. தற்பொழுது வெளிநாட்டு வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறான். இப்பொழுது பிரச்சனை ஏற்பட்டால் அவன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பாதிக்கப்படுமா?

என் தங்கை final year Exam எழுதுகிறாள். அவள் படிப்பு பாதிக்குமா? என் பெற்றோரின் நிலை? எங்கள் நட்பு என்ன ஆகும்? இவையெல்லாவற்றையும் யோசித்து யோசித்து நான் 3 மாதங்களாக மன அழுத்தத்தில் உள்ளேன். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை – **மதன், செங்கல்பட்டு.**

அன்புத் தம்பி மதன், உங்களின் உள்ளான மனவேதனை நன்கு புரிகிறது. ஒரு பக்கம் தங்கையின் படிப்பும், வாழ்க்கையும்; மறுபக்கம் நெருங்கிய நண்பனின் வேலை வாய்ப்பு பாதிக்குமா என்ற அச்சம், பெற்றோர்களுக்குத் தெரிந்தால் ஏற்படும் விபரீதம், பல வருடங்களாகப் பழகிய நட்பு என்ன ஆகும்... இப்படி பல மன போராட்டங்களை மனதுக்குள் வைத்துப் பல மாதங்களாக நீங்கள் போராடிக்கொண்டிருப்பது நன்கு புரிகிறது.

மதன், முதலில் நீங்கள் பயப்படாமல், பதறாமல் இந்தப் பிரச்சனையை நிதானமாகக் கையாள முயலுங்கள். முள்ளில் விழுந்த சேலையை மெல்ல எடுக்க வேண்டும். முள் கையையும் குத்தி பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது, சேலையையும் பாதித்துவிடக் கூடாது. கவனமாகச் செயல்பட்டால் நமக்கும் பாதிப்பு இருக்காது, சேலையும் கிழிந்து விடாது.

முதலில் கார்த்திக்கின் கனவு, பொறுப்பு, தற்போதுள்ள கடமை என்ன, தற்பொழுது அவன் எதை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறான் என்பதை உங்கள் நண்பனிடம் பேசிப் புரிய வைக்க முயலுங்கள். இந்தக் காதலைத் தொடர்ந்தால் என்னென்ன பிரச்சனைகளும், சவால்களும் வரும் என்பதையும் அவனுக்குப் புரிய வையுங்கள். பலருக்கு காதல் என்ற ஒன்று வந்துவிட்டால், அவர்களுடைய உயர்ந்த நோக்கமும் அழகிய தீர்மானங்களும் வாழ்க்கையின் Ambition, Aim எல்லாம் மறந்து, காதலும், காதலித்த நபரின் முகம் மட்டும் தான் தெரியும். வேறு எந்தக் காரியமும் தெரியாது. காரணம் ''காதலுக்கு கண் இல்லை'' என்று சொல்லுவார்கள். அதே காரியத்தை உங்கள் தங்கையிடமும் எடுத்துச் சொல்ல முயலுங்கள். தற்போது உங்கள் தங்கையின் Aim & Ambition என்ன என்று விசாரியுங்கள். இந்தப் படிப்பையும் காதலையும் ஒரே நேரத்தில் கவனம் செலுத்தி, Group -2 Exam எழுதி அரசு வேலையில் அமர வேண்டும் என்ற குறிக்கோள் சாத்தியமா? எதைத் தொடர்ந்தால் சிகரத்தை அடையலாம்; எதைத் தவிர்த்தால் இமயத்தில் இணையலாம், என்பதை எடுத்துச் சொல்லுங்கள்.

## இந்த விபரீதமான சூழ்நிலையிலிருந்து உங்கள் நண்பனும் தங்கையும் வெளிவந்து இயல்பு வாழ்க்கை வாழக் கடைபிடிக்க வேண்டிய சில வழிமுறைகள்...

### உங்கள் தங்கை

- முதலில் கார்த்திக்கிடம் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.
- மொபைல் போன் Block செய்ய வேண்டும்.
- Social Media-க்களில் Status போடுவதும், தங்கள் வேதனையையும் பிரிவையும் வெளிப்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.
- BE Final Yearக்கான படிப்பில் முழு கவனம் செலுத்த முற்பட வேண்டும்.
- Group - 2 தேர்வுக்கான Preparationஐ Side by side ஆரம்பிக்க வேண்டும்.
- நாம் ஒரு காரியத்தில் முழு கவனம் செலுத்தும்போது, இதர காரியங்களுக்கு நேரம் இருக்காது.

### உங்கள் நண்பன்

- கார்த்திக் உங்கள் வீட்டுக்கு வருவதை சற்று தவிர்க்க வேண்டும்.
- மொபைல் போனில் காஞ்சனா நம்பரை Block செய்ய வேண்டும்.
- தன்னுடைய வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான Arrangements காரியங்களை முழுமூச்சுடன் செய்ய முற்பட வேண்டும்.
- தன் குடும்பத்தின் கடன் பிரச்சனையைத் தீர்ப்பதுதான் தனது முக்கிய நோக்கம் என்பதை அடிக்கடி நினைவில் கொள்ள வேண்டும்.
- Feelingsக்கு இடம் கொடுக்காமல், Reality பார்த்து வாழ உற்சாகப்படுத்துங்கள்.

எந்த ஒரு உறவிலும் பிரிவு என்று வரும்போது வேதனையாகத் தான் இருக்கும். ஆனால் அந்த உறவைத் தொடர்ந்தால் வேதனையோடு கூடச் சேர்ந்து பல இன்னல்களும் இருக்கும் என்பதை கார்த்திக் மற்றும் காஞ்சனா உணர வேண்டும்.



மதன், ஒருவேளை நீங்கள் சொல்லும் ஆலோசனையைக் காஞ்சனா மற்றும் கார்த்திக் கேட்காத பட்சத்தில் என்ன விபரீதம் நேரிடும் என்பதையும் சொல்லுங்கள். அநேக நேரம் தெளிவான தீர்மானம் எடுக்காததால் ஏற்படும் பிரச்சனைகளும் பின்விளைவுகளும், பாதிப்புகளும் மிக அதிகம் என்பதை நீங்கள் தான் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

இன்றைய வாலிபர்கள் காதல் வயப்படும்போது எந்த விதமான பின்விளைவுகளையும் யோசிப்பதில்லை. அதைபற்றி அவர்களுக்குக் கவலையும் இல்லை. **Reality**யை விட **emotions** மேலோங்கி இருப்பதால் எதையும் யோசிக்கும் நிலையில் அவர்கள் இருக்க மாட்டார்கள்.

### ஒருவேளை, அவர்கள் இருவரும் (K & K) இந்த உறவைத் தொடர்ந்தால் ஏற்படும் பிரச்சனைகள்...

- உங்கள் நண்பன் கார்த்திக்கின் தவறான செயலால் உங்கள் பெற்றோர் கொந்தளித்து எழும்பலாம். அவன் நட்பைத் துண்டித்து விடு என்று சொல்லலாம்.
- காஞ்சனாவின் படிப்பில் பாதிப்பு ஏற்பட்டு, ஏன் பாதியில் நிறுத்தப்பட வாய்ப்பும் உண்டு. **Group -2** கனவு நினைவாக வாய்ப்பு இல்லை.
- உங்கள் தங்கை காஞ்சனா தேவையில்லாத மன உளைச்சலுக்குள்ளாக வாய்ப்பு உண்டு.
- உங்கள் 3 நண்பர்கள் மத்தியில் தேவையில்லாத பிரச்சனையும் பிரிவுகளும் உண்டாகும்.



▸ கார்த்திக் இந்தப் பிரச்சனை மத்தியில் வெளிநாட்டு வேலைக்காக செயல்படாமல், மன உளைச்சலுக்குள்ளாக வாய்ப்பு உண்டு. இதனால் அவர் கனவும் கடன்பட்ட வாழ்க்கையும் ஒரு பெரும் சுமையாக மாற வாய்ப்பு உண்டு.

▸ மதன், உங்கள் ஆலோசனைக்கு உங்கள் தங்கை காஞ்சனாவும் நண்பன் கார்த்திக்கும் சற்று கீழ்ப்படிந்து தங்கள் படிப்பையும், வெளிநாட்டு வேலை தேடுவதையும் முழுமூச்சாகச் செய்யும்போது இவருடைய எதிர்காலமும் கனவும் பாதிக்கப்படாது.

▸ மேலும் கல்லூரி படிக்கும்போது, வாழ்க்கைத் துணையை தீர்மானிக்கும் பக்குவம் உங்கள் தங்கைக்கு இருக்க முடியாது. இது ஒருவிதமான ஈர்ப்பு. இந்த உணர்வுகளை அவர்கள் சற்று சரியாகக் கையாண்டால், அநேக பிரச்சனைகளைத் தவிர்க்கலாம்.




▸ உங்கள் நண்பர் கார்த்திக் முதலில் வெளிநாட்டுக்கு சென்று அவன் பொறுப்புகளையும் பிரச்சனைகளையும் சரி செய்து முடிக்க அவரை உற்சாகப்படுத்துங்கள்.

▸ உங்கள் தங்கையைப் படிப்பிலும் அவர்கள் எதிர்கால கனவான அரசு வேலையில் அமர்வதிலும் கவனம் செலுத்த சொல்லுங்கள். அதே நேரம் உங்கள் பெற்றோருக்கு இதைப் பக்குவமாகச் சொல்லி, உங்கள் தங்கை இந்த உறவிலிருந்து வெளியே



வந்து, இயல்பு வாழ்க்கை வாழ உதவும் வகையில், அவர்களிடம் அன்பு செலுத்த சொல்லுங்கள். தேவையில்லாத வார்த்தைகளால் காயப்படுத்த வேண்டாம்.

▸ சில மாதங்கள் உங்கள் தங்கைக்கு அவகாசம் கொடுத்தால் அவர்களே இந்தச் சிந்தனை மற்றும் உறவிலிருந்து வெளியே வர வாய்ப்பு உண்டு. காரணம் மனதளவில் அதிகமான பாதிப்பு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். அந்த எண்ணங்களை மறக்க, மறுபடியும் படிப்பதிலும் மற்ற காரியத்தில் கவனம் செலுத்தவும் அவர்களுக்கு நேரம் கொடுங்கள்.

▸ நீங்கள் நான்கு பேரும் இணைந்து செயல்பட்டால் எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல், இந்தப் பிரச்சனை முடிவுக்கு வர வாய்ப்பு உண்டு.

▸ பொறுமையாய் செயல்படுங்கள், அவசரப்பட வேண்டாம். நீங்கள் பொறுமையாய், ஞானமாய் இந்தச் சூழ்நிலையைக் கையாண்டால் எந்த உறவுக்கும் பாதிப்பு ஏற்படாது.

▸ உங்கள் தங்கையின் கனவும் நினைவாகும்.

▸ உங்கள் நண்பனின் எண்ணமும் நிறைவேறும், வெளிநாடு செல்வதால் அவரின் கடன் வாழ்க்கை மாறும்.

▸ உங்கள் நட்பும் நீடிக்கும்.

**ALL THE BEST!**



*"சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள், சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள்"*
*(நீதி.27:6)*

# இது இல்ல Trendu...!

தகவல்: டியூக் ரிச்சார்ட்

**ஹாய் பிரண்ட்ஸ்! கடந்த 5 மாதங்களாக ஒரு வாலிபன் தன்னுடைய செயல்பாடுகளில் எப்படி மாதிரியாக இருக்க வேண்டும் என்று வேதத்தின் அடிப்படையில் பார்த்து வருகிறோம். இந்த மாதம் கற்பில் எப்படி மாதிரியாய் இருக்க வேண்டும் என்று பார்ப்போம்.**

## கற்பில் மாதிரி

இந்நாட்களில் **trend** ஆக இருக்கிற சில காரியங்கள், வேதத்திற்கு புறம்பாக இருக்கிறதை நாம் பார்க்கிறோம். இந்த உலகத்தின் **trend**க்கு ஏற்றபடி நாம் வாழ்வதைக் காட்டிலும், வேதத்துக்கு ஏற்றபடி வாழும்போது நமது வாழ்க்கை ஆசீர்வாதமாக அமையும்.

இந்த நாட்களில் **midnight** பிரியாணி, **birthday party, week end parties** எனப் பல காரியங்கள் **trend** என்ற பெயரில் வாலிபர்களை இழுத்துக் கொண்டு இருக்கிறது. இந்த **parties** எல்லாவற்றிலும் களியாட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆண் பெண் வித்தியாசம் இல்லாமல் ஒன்றாக இணைந்து குடித்து, வெறித்துப் பல பாவ காரியத்தில் ஈடுபடுகிறார்கள். **Just for fun** என்கிற காரியம் வாலிபர்கள் மத்தியில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வேதத்தில், 'உன் வாலிபத்தில் சந்தோஷப்படு, ஆனாலும் நீ நியாயத்தில் கொண்டு வந்து நிறுத்தப்படுவாய்' என்று பிரசங்கி எழுதி இருக்கிறார்.

எனக்குப் பிரியமான வாலிபனே! ஒரு திருமண பந்தத்திற்குள் போவதற்கு முன்பாக ஒரு வாலிப சகோதரனோ சகோதரியோ தன்னுடைய சரீரத்தை பரிசுத்தமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை வேதத்தில் நாம் பார்க்கிறோம். இந்தக் காலத்தில் சிலர் திருமணத்திற்கு முன்பு எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து கொள்ளலாம்,

திருமணத்திற்கு பின்பு உண்மையாக இருந்தால் போதும் என்று சொல்லுவது வேதத்தின்படி மிகவும் தவறான கருத்து. எல்லா காலத்திலும் பரிசுத்தத்தை காத்துக் கொள்ள வேண்டும். வாலிப சகோதரனே, சகோதரியே, உன் கற்பு மிகவும் முக்கியம். கற்பு என்றால் பெண்களுக்கு மட்டும் என்பது அல்ல, ஆண்களுக்கும் உரியது. பாலியல் பாவம் மிகவும் கொடூரமானது. இந்தச் சரீரத்தை நாம் கெடுத்து விட்டால் கர்த்தரே நம்மைக் கெடுத்துப் போடுவார் வேதத்தில் பார்க்கிறோம். ஏனென்றால் இந்தச் சரீரம் தேவன் வாசம் செய்கிற ஆலயம். ஒருவன் இந்தச் சரீரத்தில் விபச்சாரத்திற்கும் வேசித்தனத்திற்கும் அசுசிக்கும் இடம் கொடுத்து விட்டால், வாழ்க்கையில் சமாதானத்தைக் காண முடியாது. அநேகர் சரீரத்தினால் தவறு செய்தால்தான் தவறு என்று நினைக்கிறார்கள். நமது எண்ணத்தில் தவறான எண்ணம் கொண்டு வருவோமேயானால், அது முடிவில் பாவம் செய்வதற்கு ஏதுவான காரியமாக மாறிவிடும்.

மத்தேயு 5ஆம் அதிகாரத்தில், ''ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கும்போது நாம் விபச்சார பாவம்




செய்கிறோம்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படியானால் நமது சிந்தையை கறைபடுத்தக்கூடிய காரியத்தில் ஈடுபடாமல் இருப்பது அவசியம். நம்மைச் சுற்றிலும் பாவம் நிறைந்திருக்கிறது. ஒரு **movie** எடுத்தாலோ **web series** எடுத்தாலோ அதிலும் ஆபாசத்தை வைத்திருக்கிறார்கள். அது வாலிபர்களுடைய இருதயத்திற்குள் போகும்போது தவறான காரியத்தில் அவர்களை ஈடுபட வைத்து பரிசுத்தத்தை கெடுத்துவிடும்.

எனவே இந்தக் காரியத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருங்கள். **Live-in, friends for benefits** என்று இப்படி அப்படி வாழ்ந்து கொள்ளலாம் என்பது **Trend** கிடையாது.

அது உங்கள் வாழ்க்கையை சீரழிக்கும் ஒரு காரியம். மாறாகப் பரிசுத்தமாக வாழ்ந்து மற்றவர்களுக்கு முன்பு ஒரு பரிசுத்த **Trend**ஐ உருவாக்குவோம்.

# நல்ல நண்பன்



நம் அனைவரது வாழ்விலும் இரத்த தொடர்பில்லாத ஒரு உன்னதமான உறவு நட்பு ஆகும். ஒரு சிறந்த நட்புக்கு வயது, மொழி, ஜாதி, மதம் எதுவுமே தடை கிடையாது. ஒவ்வொருவருடைய வாழ்விலும் நட்பு மகத்துவம் வாய்ந்தது. ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளுதலை அடிப்படையாகக் கொண்டதுதான் நட்பு. நமது துக்கத்திலும், மகிழ்ச்சியிலும் பங்கு கொள்வதில் நண்பர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசுவது போல, ஒரு நல்ல நண்பரோடு சேர்ந்தால் நம் வாழ்வும் வளம் பெற்று மேன்மை அடையும்.

இயேசு கப்பர்நகூமில் ஒரு வீட்டில் இருப்பதை கேள்விப்பட்டு, நான்கு நண்பர்கள் திமிர்வாதத்தால் கஷ்டப்படும் தனது நண்பனைச் சுமந்து கொண்டு அவரிடத்தில் வந்தார்கள். **''ஜனகூட்டத்தில் அவருக்குச் சமீபமாய் போகக்கூடாமல் இருந்தபடியால் அவர் இருந்த வீட்டின் மேற்கூரையை பிரித்துத் திறப்பாக்கி திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள்''** (மாற்கு 2:4). இந்தச் செயல் அங்கிருந்த அனேக ஜனங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. தன் நண்பனின் வாழ்க்கை மாற வேண்டும் என்று அதிக அக்கறையுடன் செயல்பட்ட இவர்களின் செயலையும், விசுவாசத்தையும் பார்த்து இயேசு அவனைச் சுகமாக்கினார். நம்மீது அக்கறைக் கொண்ட நல்ல நண்பர்கள் கிடைப்பது நமக்குப் பெரிய பாக்கியம். திமிர்வாதக்காரனுக்கு நான்கு நல்ல நண்பர்கள் இருந்ததால் அவன் வாழ்க்கை மாறியது. உங்களைச் சுற்றிலும் இருக்கும் நண்பர்கள் உங்கள் மீதும், உங்கள் வாழ்க்கையின் மீதும் அக்கறை உள்ளவர்களாக இருந்தால், உங்கள் வாழ்க்கையும் வளம் பெறும். எனவே நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும்போது மிகவும் கவனமாக இருக்க





வேண்டும். நண்பர்களால் நமக்குக் கைக்கொடுத்து உதவவும் முடியும்; நம் காலை வாரி விடவும் முடியும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு ஏராளமான வாலிபர்கள் தங்கள் பெற்றோரின் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்காமல், நண்பர்களின் வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுத்து வாழ்க்கையை தொலைத்து தவறான பாதையில் சென்று விடுகின்றனர். **மோசம்போகாதிருங்கள், ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களை கெடுக்கும்** (1 கொரி. 15:33). சாலொமோன் தன் பிதாக்களோடு



நித்திரை அடைந்த பின்பு அவன் ஸ்தானத்தில் அவன் குமாரனாகிய ரெகொபெயாம் இராஜாவானான். அவன் பெரியவர்களின் ஆலோசனைக்குச் செவி கொடுக்காமல், **முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையை அவன் தள்ளிவிட்டு, தன்னோடே வளர்ந்து தன் சமுகத்தில் நிற்கிற வாலிபரோடே ஆலோசனைபண்ணி** (1 இராஜா. 12:8) தவறான முடிவு எடுத்ததால் இஸ்ரவேலின் இராஜ்யம் இரண்டாகப் பிரிந்து போனது. தவறான நண்பர்களின் ஆலோசனையும் வழிநடத்துதலும் ரெகொபெயாம் வாழ்க்கையில் தேவ திட்டத்தையும் நோக்கத்தையும் தடைசெய்து அவன் வாழ்க்கையைக் கெடுத்தது. நீங்கள் தவறான நண்பர்களின் ஆலோசனைக்கு இடம் கொடுத்தால் உங்கள்மீது தேவன் வைத்திருக்கும் திட்டம் நிறைவேறாமல் போய்விடும்.

உலக தடகளப் போட்டியில் ஜாம்பவனாகத் திகழ்ந்த பென் ஜான்சன் தனது நண்பனின் தவறான ஆலோசனைக்கு இடங்கொடுத்து போதைப்பொருள் பயன்படுத்தியதால் அவர் பெற்ற பல தங்க பதக்கங்கள் பறிக்கப்பட்டு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. 2 ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் போட்டியில் பங்குபெற்றவர் மறுபடியும் போதைப் பொருள் பயன்படுத்தியதால் வாழ்நாள் தடை விதிக்கப்பட்டு, தன் வாழ்க்கையின் இலட்சியத்தை இழந்தார். தனது நண்பனின் தவறான ஆலோசனை அவருடைய வாழ்க்கையை முற்றிலும் மாற்றி உருக்குலைத்து விட்டது. எனவே சரியான நல்ல நண்பர்களைத் தேர்வு செய்து அவர்களுடன் பேசப் பழகுங்கள். உங்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். நன்றாக நேசித்துப் பழகும் நண்பர்கள் கூடச் சில சமயங்களில் எதிரிகளாக மாறுவதுண்டு. ஆனால் இயேசு எல்லா சமயங்களிலும் நம்மை நேசிக்கிற நல்ல நண்பராக இருக்கிறார். உங்களையும் என்னையும் நேசித்தபடியால் தான் தன் ஜீவனையே நமக்காக கொடுத்து விட்டார். **ஒருவன் தன் ஸ்நேகிதருக்காகத் தன் ஜீவனை கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவருடத்திலுமில்லை** (யோவான் 15:13) என்றார்.

***எனக்கன்பான வாலிபர்களே! இயேசு ஒருவரே உங்கள் வாழ்வில் வரும் துன்பத்திலும் சந்தோஷத்திலும் எப்போதும் உங்களுடன் இருக்கும் நல்ல நண்பன் ஆவார். உலகத்தில் இருக்கும் நண்பர்கள் உங்களை மறந்தாலும், இயேசு ஒருபோதும் உங்களை மறப்பதில்லை. இவ்வுலகில் எத்தனை நண்பர்கள் இருந்தாலும், உங்களை நிரந்தரமாக நேசிக்கக்கூடிய நல்ல நண்பன் இயேசு ஒருவர் மட்டுமே!***



# வாலிபர் எழுப்புதல் கூடுகை




கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் வாலிபர்களுக்கான எழுப்புதல் கூடுகை ஆலங்குளம், சோளிங்கர், மும்பை THANE, MALAD, சேலம் – கருமந்துறை, திண்டுக்கல், வள்ளியூர், திருப்போரூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற கூடுகைகளில் **2421 வாலிபர்கள்** கலந்து கொண்டார்கள். எழுப்புதலுக்காக வாலிபர்கள் எழும்பிப் பிரகாசிக்கிறவர்களாக மாற வேண்டும் என்று அநேக தேவ ஊழியர்கள் தேவ செய்தியளித்து ஜெபித்தார்கள். தேவன் ஊழியர்களை வல்லமையாகப் பயன்படுத்தினார். வந்திருந்த வாலிபர்கள் எழுப்புதல் தரிசனத்தோடு எழுப்புதல் அக்கினியைப் பரவச் செய்கிறவர்களாகத் தேவன் அபிஷேகித்து அருள்வார்.

தேவனுக்கே மகிமை!













the pattern
NO RULES







# தொடக்கம் சிறியது.. வெற்றி பெரியது!!





சாதனை: சுமா கிரேஷன்

**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்!**
**நம்மில் அநேகருக்கு எளிதாக எப்படி வெற்றி அடையலாம், வெகுவிரைவில் எப்படி சாதனையாளராக மாறலாம் என்ற எண்ணம் உள்ளது. ஆனால் வெற்றியை நெருங்கச் சில விதிமுறைகளைக் கவனமாகக் கையாள வேண்டும். மிகத் துல்லியமான கனவு, விடாப்பிடியான உழைப்பு, துணிச்சலான முடிவுகள் மற்றும் நேர்மை என்ற நான்கு குணங்களை வாழ்வில் கடைபிடித்தால், நாம் யாவரும் வெற்றிக்குத் தடை இல்லாதவர்கள்தான். இந்த நான்கு குணங்களைக் கொண்டு வெற்றிக் கண்ட சாதனையாளரின் வாழ்க்கைப் பயணம் உங்கள் முன்...**

மைக்கேல் டெல் **(Michael Dell)** 1965ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்தார். சிறுவயதிலிருந்தே, கணினிமீது இருந்த அதிகபடியான ஆர்வம் இவரைத் தனித்துவமாகக் காட்டத் தொடங்கியது. தன்னுடைய 15வது வயதில், தான் வாங்கிய கணினியைத் திறந்து அதன் உள்பகுதியைப் பிரித்து அதன் பாகங்களை ஆராய்ந்துப் பார்த்தார். இதன் விளைவாகக் கணினிமேல் உள்ள ஆர்வம் அதிகரித்து. தன்னுடைய 19ஆம் வயதில் வெறும் 1000 டாலர் முதலீட்டுடன் தனது வீட்டின் சிறிய அறையிலேயே **PC's Limited** என்னும் நிறுவனத்தைத் தொடங்கினார். அவரைச் சுற்றி உள்ளவர்கள் நீ மருத்துவராகலாம் என்று உற்சாகம் தந்த போதும், இவருடைய எண்ணம் எல்லாம் இவர் கனவை நிறைவேற்றுவதில் தான் இருந்தது. இவர் உருவாக்கிய வணிக முறை, வாடிக்கையாளருக்கு நேரடியாகக் கணினிகளை வழங்குவது தான். இந்த முயற்சிதான் **Dell** நிறுவனத்திற்கு உலக அளவில் பெரும் வெற்றியைக் கொண்டு வந்தது.







அதுமட்டுமல்லாமல் வாடிக்கையாளரின் விருப்பப்படி அமைக்கும் தனிப்பயன் கணினிகள் குறைந்த செலவில், தரமான சேவையை வழங்கியது. தொடர்ந்து படிப்படியாக முன்னேறி, 1992ஆம் ஆண்டு மைக்கேல் டெல் உலகின் மிக இளைய **CEO**வாக புகழ்பெற்றார். இவர் தொழில் முனைவோர் மட்டுமின்றி மக்களின் சமூக நலனிலும் அதிக அக்கறைக் கொண்டவராக **Michael and Susan Dell Foundation** என்ற தன்னலமற்ற அமைப்பை உருவாக்கிக் கல்வி மற்றும் குழந்தைகளின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். மைக்கேல் டெல் பல ஆண்டுகளாக **Forbes** உலக பணக்காரர் பட்டியலில் இடம்பெற்று வருகிறார்.



இதை வாசிக்கும் நண்பர்களே! தன்னுடைய முயற்சியையும், ஆர்வத்தையும் கொண்டு உலகத்தர தொழில்நுட்ப நிறுவனத்தை உருவாக்கியவர் மைக்கேல் டெல். இவர் காட்டிய பாதை, இன்றைக்கு நமக்குப் பெரும் ஊக்கமாக இருக்கிறது. கனவை நினைத்தபடி அல்ல, உழைத்தபடி வாழ வேண்டும் என்பதை அவருடைய வாழ்க்கை நமக்குக் கற்று தருகிறது.



# பரபரப்பு செய்திகள்


கிறிஸ்தவ செய்திகள்: ஜெனிபர்

**Hi friends,**

**எல்லாரும் எப்படி இருக்கீங்க? பரபரப்பு செய்திகள் என்னும் இத்தொடரில் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி!**

**இந்த மாதமும் ஒரு புதிய பரபரப்பு செய்தியுடன் நான் உங்களை Meet பண்ண வந்திருக்கேன்.**

ஆனால் அதற்கு முன்பாக நமது வேதாகமத்தில் பாபிலோனுக்கு அடிமையாகக் கொண்டு போகப்பட்ட தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அந்தத் தேசத்தின் சரித்திரத்தையே மாற்றிப் போட்டு அந்தத் தேசத்தை ஆளுகிறவர்களாய் மாறினதையும், அவர்கள் நமது தேவனுடைய பராக்கிரமத்தையும், வல்லமையையும் அந்தத் தேசத்திற்கு வெளிப்படுத்தி, ஏன் அந்தத் தேசத்தின் அதிகாரிகளைக் கூடத் தேவன் பக்கமாய் திருப்பினதையும் பார்க்கிறோம். ஒருநாள் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தன்னுடைய சிலையை வணங்கச் சொல்லும்பொழுது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அந்தக் கட்டளைக்கு மறுத்துப் பயமின்றி தங்கள் ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தரை மாத்திரமே பணிந்து கொள்வோம் என்று அறிக்கையிட்டனர். அதனால் கோபமூண்ட நேபுகாத்நேச்சார் அவர்களை அக்கினிச் சூளையில் போட்டார். ஆனால் அந்த 4 பேரும் அதில் சந்தோஷமாக, ஒரு சேதமுமின்றி உலாவினதையும் அவர்களோடு நான்காவதாக ஒரு நபர் உலாவினதைப் பார்த்த நேபுகாத்நேச்சார், ஆச்சரியப்பட்டு நம்முடைய தேவனாகிய கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து, அவரைத் தன் தெய்வமாக  ஏற்றுக் கொண்டதையும் நாம் படித்திருக்கிறோம்.



இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இரட்சிக்கப்பட்டதற்கு அந்த 4 வாலிபர்களும் தேவன் மீது பாராட்டிய வைராக்கியமும், எந்தச் சூழ்நிலைக்கும் **Compromise** ஆகாததும் தான் காரணம். ஆனால் இப்பொழுது உள்ள வாலிபர்கள் நிறைய சூழ்நிலைகளில் தேவனுக்காய் வைராக்கியம் பாராட்டாமல் **compromise** செய்கிறார்கள்.

*சரி வாங்க... இதே மாதிரியான அற்புதம் இன்றும் நடக்குமா? என்று யோசித்து கொண்டு இருந்தபொழுது தான், ஆம்ஹெர்ஸ்ட் நகரத்திலிருந்து நமக்கு ஒரு பரபரப்பான செய்தி கிடைத்தது.*



*கார்ட்ரைட் என்பவர் 70 ஆண்டுகளாகச் சுவிசேஷம் அறிவித்து வந்த சிறந்த பிரசங்கியார். ஒருநாள் அவரை ஒரு மெத்தடிஸ்ட் ஆலயத்தில் பேசும்படி கேட்டுக் கொண்டார்கள். பிரசங்கத்திற்கு முன் ஒரு பாட்டு பாடுவார்கள் அல்லவா? அந்தச் சமயத்தில் அப்பொழுதைய அமெரிக்க ஜனாதிபதி ஆண்ட்ரூ ஜாக்சன் என்பவர் ஆலயத்திற்குள் வந்து ஒரு ஆசனத்தில் அமர்ந்தார். இதைப் பார்த்த ஆலய குரு பிரசங்கியாரிடம் சென்று, அவருடைய காதில் ஜனாதிபதி வந்திருக்கிறார், அவர் வருத்தப்படும்படி ஒன்றையும் சொல்லி விடாதீர்கள் என்று எச்சரித்தார்.*

*கார்ட்ரைட் பிரசங்கியார் அன்று மனம் திரும்புதலைப் பற்றி பேசினார். ஜனாதிபதி வந்திருக்கிறார் என்று கொஞ்சம் கூட பயப்படவில்லை. பிரசங்கத்தில் மனம் திரும்பாவிட்டால் அழிவு வருவது நிச்சயம். மனம் திரும்பாத சாதாரண மனிதனுக்கு அழிவு வருவது போல, மனம் திரும்பாத ஜனாதிபதிக்கும் அழிவு வரும் என்று எச்சரித்தார்.*

*சபை குருவுக்கு நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் பிரசங்கம் செய்த கார்ட்ரைட்க்கு சிறிதும் பயமில்லை, பிரசங்கத்தைக் கேட்ட ஜனாதிபதியும் கோபப்படவில்லை. மாறாக, ஆராதனை முடிந்ததும் ஜனாதிபதி ஜாக்சன் பிரசங்கியாரைத் தேடிச் சென்று அவர் மூலம் வெளிப்பட்ட தெய்வத்துக்காக நன்றி செலுத்தினார். அன்றிலிருந்து இருவரும் நண்பர்களானார்கள். கார்ட்ரைட், ஜனாதிபதியைப் படிப்படியாக கிறிஸ்துவிடம் வழி நடத்தினார். ஜாக்சன் உண்மையான கிறிஸ்தவனாகி, சிறந்த ஜனாதிபதி என்று பெயர் பெற்றார். மனிதனுக்கு பயந்தவன் வல்லமையான பிரசங்கியாக இருக்க முடியாது. கோழைகள் ஆண்டவரின் ஊழியராக இருக்க முடியாது. **"நீதிமான்களோ சிங்கத்தைப் போல தைரியமாக இருக்கிறார்கள்"** (நீதி 28:1).*

**குருடர்கள் பார்ப்பதும், வியாதியாஸ்தர்கள் சுகமாவதும், தேவைகள் சந்திக்கப்படுவதும் மட்டும்தான் அற்புதமா? இல்லை, மனிதன் இரட்சிக்கப்படுவதும் அற்புதம் தானே. அதுவும் அதிகாரத்தில் இருக்கிறவர்கள் இரட்சிக்கப்படுவது அரிதான காரியம். எனவே அவர்கள் இரட்சிக்கப்பட்டால் அது மிகப் பெரிய அற்புதம் தானே.**

***இந்தத் தொடரை வாசித்துக் கொண்டிருக்கிற உங்களைத் தேவன் இராஜாக்களுக்கு முன்பாகவும், அதிகாரிகளுக்கு முன்பாகவும் நிறுத்த ஆயத்தமாக இருக்கிறார். உங்கள்மூலம் அவர்களுக்கு இரட்சிப்பைக் கட்டளையிடப் போகிறார். ஆனால் அதற்குத் தடையாக உள்ள பயத்தை நாம் களைந்து போட வேண்டும். கார்ட்ரைட் என்னும் பிரசங்கியாரின் பயமற்ற அந்தக் குணம் தான் ஒரு தேசத்திற்கு உண்மையான, நல்ல சிறந்த கிறிஸ்தவ, ஜனாதிபதியை தந்தது. சிறந்த தலைவர்கள் உருவாவது கிறிஸ்தவ வாலிபர்களாகிய நம் கையில் தான் உள்ளது. என்ன friends தேசத்தை மாற்ற நீங்க Readyயா?***

(செய்திகள் தொடரும்...)

# ஜெபக் கையேடு

## ஆகஸ்ட் 2025



ஜெபம்: எஸ்தர்

1 இந்தியா முழுவதும் மதுபானத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் சுமார் 16 கோடி பேரில் 7.5% பேர் பெண்கள். மதுபான பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருப்போர் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

2 பள்ளி கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் போதை பழக்கத்திற்கு அடிமையாகி தங்கள் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கும் மாணவர்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

3 போதைக்கு அடிமையாவதால் கல்வி, வேலை மற்றும் எதிர்காலங்களை இழந்து நிற்கும் வாலிபர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

4 மது விற்பனை மூலம் அதிக வருமானத்தை ஈட்டும் ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா மாநிலங்களில் பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்பட ஜெபிப்போம்.

5 தேச அளவில் 45%த்திற்கும் அதிகமான மது விற்பனை நடக்கும் மாநிலங்களில் உள்ள முதல்வர்களின் இருதயங்களில் தேவன் பெரிய மாற்றத்தைக் கொண்டுவர ஜெபிப்போம்.



6 வேலை வாய்ப்பை இழந்து, வருமானம் இல்லாத போதும் மது வாங்க திருடுவது, கொள்ளையடிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

7 மதுபோதையால் ஆண்டுக்கு 30 லட்சம் பேரும், நிமிடத்திற்கு 6 பேரும் மரணமடையும் இந்த நிலை நம் தேசத்தை விட்டு மாற ஜெபிப்போம்.

8 மது அருந்துவதால் கல்லீரல், வாய் புற்றுநோய், கணையம் தொடர்பான நோய்கள், காசநோய் மற்றும் பல நோய்களினால் தாக்கப்பட்ட சுமார் ஒரு கோடி பேரும் சுகம் பெறவும், குடிப்பழக்கத்தை விட்டு விடவும் ஜெபிப்போம்.

9 இந்தியாவில் 8 நிமிடத்திற்கு ஒரு பெண் கருப்பை வாய் புற்று நோயினால் உயிரிழக்கின்றார். ஆண்டுக்கு 2.80 இலட்சம் பெண்கள் உயிரிழப்பது தடுக்கப்பட ஜெபிப்போம்.

10 புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடி சிகிச்சைப் பெற்று வரும் அனைவரும் பூரண சுகம்பெற ஜெபிப்போம்.

11 புற்றுநோய் இல்லாத ஒரு புதிய சமுதாயத்தை ஏற்படுத்தவும், அரசு அதற்கான மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைக்க ஏற்பாடுகள் செய்ய ஜெபிப்போம்.

12 உலக அளவில் கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்பு 71.3 கோடியாக இருந்த ஏழைகள் எண்ணிக்கை இப்போது 83.8 கோடியாக அதிகரித்துள்ளது. இந்த வறுமை நிலை மாற ஜெபிப்போம்.

13 குஜராத்தில் மூன்றில் ஒரு பங்கு குடும்பத்தினர் அதாவது 31 இலட்சம் குடும்பங்கள் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளனர். குஜராத் மாநிலத்தின் வறுமை நிலை மாற ஜெபிப்போம்.





14 தமிழகத்தில் அரசு வேலைக்காகக் காத்திருக்கும் 35.35 இலட்சம் பேருக்குப் படிப்புக்கு ஏற்ற வேலைகள் அரசு வழங்கப்பட ஜெபிப்போம்.

15 அரசு வேலைக்காக விண்ணப்பித்து காத்திருக்கும் 18 வயது முதல் 25 வயது வரை உள்ள 7,58,639 வாலிபர்களுக்கு ஏற்ற வாய்ப்பு வேலை வாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.

16 உலக அளவில் 10 கோடிக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் இருக்கும் முதல் நாடு இந்தியா. ஆனால் வேலை வாய்ப்பை வழங்குவதில் பின்தங்கி இருக்கும் அரசு, வலுவான நிலையை அடைய நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

17 அரசு அலுவலகங்களில் காலி பணியிடங்களை நிரப்ப, வேலைக்காக காத்திருக்கும் வாலிபர்களுக்கு வேலைவய்ப்புகளை கொடுத்து அவர்கள் எதிர்காலம் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்



18 அகமதாபாத் – லண்டன் ஏர் இந்தியா விமானத்தில் பயணம் செய்யவிருந்த 242 பயணிகள் விபத்துக்குள்ளாகி மரித்த குடும்பங்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

19 விமான விபத்துக்கள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.


20 விமான ஓட்டிகள், பணிப்பெண்கள் மற்றும் விமானத்துறையில் இருக்கும் ஒவ்வொருவரும் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

21 இந்தியாவில் உள்ள 34 சர்வதேச விமான நிலையங்கள் பாதுகாக்கப்படவும், விமானங்கள் பழுதுபார்த்து சரியான முறையில் பயன்படுத்தப்படவும் ஒவ்வொருவருக்கும் தேவ ஞானம் உண்டாகவும் ஜெபிப்போம்.

22 2024ஆம் ஆண்டு 1374 நிலநடுக்கங்கள் ஏற்பட்டு தேசங்களை உலுக்கியது. இனி வரும் நாட்களில் நிலநடுக்கங்கள் ஏற்படாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

23 கடந்த ஆண்டுகளில் நிலநடுக்கங்களில் சிக்கி சுமார் 550 பேர் மரணம் அடைந்ததோடு, பாதிப்புகள் ஏற்பட்டது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

24 உலகம் முழுவதும் அதிகரித்து வரும் புவி வெப்பமயமாகுதலின் காரணமாக ஏற்படும் இயற்கை பேரழிவுகள் தடுக்கப்படவும், ஜனங்களின் ஜீவன் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.





25 உலகம் முழுவதும் கடுமையான பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ள 34 கோடி பேருக்கும் உணவு கிடைக்க ஜெபிப்போம்.

26 உணவு பற்றக்குறையால் 18 நாடுகளிலிருந்து இடம்பெயர்ந்த 96 கோடி பேர் அந்தந்த நாடுகளில் சென்று வாழ ஜெபிப்போம்.

27 உணவு பற்றாக்குறைக்கு காரணமாக இருக்கும் காலநிலை மாற்றத்தினால் விவசாயம் பாதிக்கப்படாமல் இருக்க ஜெபிப்போம்.


28 உணவின்றி தவிக்கும் மக்களுக்கு அரசு உணவுப் பொருட்கள் கிடைக்கவும், பட்டினி சாவுகள் குறைக்கப்படவும் ஜெபிப்போம்.

29 பரிசுத்த ஆவியானவர் மாம்சமான யாவர்மேலும் ஆவியை ஊற்றப்பட ஜெபிப்போம்.

30 உலகமெங்கும் உள்ள திருச்சபைகளுக்குள் எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.

31 சபைகளுக்கு எதிராக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும், சபைகள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.





# எழுப்புதலின் விதைகள்!

கடந்த மாதம் மேரி ஸ்லெசர் அவர்கள் ஆண்டவர் மீது வைத்த அன்பின் நிமித்தம் ஆப்ரிக்காவிலேயே இருந்து பல சவால்களைச் சந்தித்து அநேகரை கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தினார்கள் என்று பார்த்தோம். இந்த மாதம், பெற்றோரின் எதிர்ப்பை மீறித் தன் கையிலிருந்த 70 டாலர் பணத்துடன் வெளியேறி இன்றும் மிஷனெரியாக இருக்கும் ஒருவரைக் குறித்துப் பார்ப்போம்.




சிறுவயதிலேயே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புரூஸ் ஓல்சன் என்ற வாலிபன், தனது 15வது வயதில் தென்அமெரிக்காவில், கிறிஸ்துவை அறியாத மக்களைக் குறித்துக் கேள்விப்பட்டு அவர்களுக்காக ஜெபித்தோடு, அந்த மக்களைப் பற்றிய முழு விபரங்களையும் சேகரிக்கவும் தொடங்கினார். 1961ம் ஆண்டு தனது 19வது வயதில் தேவனுடைய அழைப்பின் நிச்சயத்தை உணர்ந்து, பெற்றோரின் எதிர்ப்பையும் தாண்டி, தன் கையிலிருந்த 70 டாலர் பணத்துடன் வெனிசுலா என்ற நகரத்திற்கு மிஷனெரியாகச் சென்றார். கையில் இருந்த பணம் வேகமாகக் காலியாக, வேறுவழியின்றி முற்றிலும் தேவனையே சார்ந்திருந்தார். அங்கிருக்கும்போது ஸ்பானிய மொழியையும் கற்றுத் தேர்ந்தார்.

மோட்டிலோன் என்ற பழங்குடியினர் எவ்வித நாகரீகமற்றவர்களாய், பிறமக்கள் அவர்களைச் சந்திக்க அனுமதிக்காதவர்களாய் வாழ்கின்றனர் எனத் தெரிய வந்தபோது, அவர்களைக் குறித்த பாரம் அந்த வாலிபனுக்குள் உண்டானது. அந்நேரத்தில் அந்நியர் அனைவரும் உடனடியாக வெனிசுலா நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் அந்த வாலிபன் தவித்தபோது, விடுதியில் உள்ள ஒருவர், தென் அமெரிக்காவில் தங்கவும், பழங்குடி மக்கள் மத்தியில் ஊழியம் செய்யவும் உதவினார்.

ஒருநாள் ஒரு வழிகாட்டியின் உதவியோடு மோட்டிலோன் பழங்குடியினரைத் தேடி அடர்ந்த காடுகளுக்குள் பலநாள் பயணம் செய்தார். அவ்விடத்தை அடைந்தவுடன் ''மோட்டிலோன் பழங்குடியினர் வாழும் இடம் இதுதான்'' என்று சொல்லிவிட்டு அந்த வழிகாட்டி மறைந்து விட்டார்.

அந்த வாலிபன் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தபோது 6 அடி அம்பு ஒன்று பாய்ந்து வந்து அவனது தொடையை குத்தியது. உடனே மயங்கிக் கீழே விழுந்தான். கண் விழித்துப் பார்த்தபோது, பலர் ஈட்டியுடன் அவனைச்சுற்றி நின்றுக் கொண்டிருந்தனர். தலைவன் இல்லாததினால் அவனை ஒரு வீட்டில் தங்க வைத்திருந்தார்கள். இரண்டு நாட்கள் காத்திருந்த அந்த வாலிபன் வேட்டைக்கு வந்த சிலரால் காப்பாற்றப்பட்டு, ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இரண்டே வாரங்களில் நல்ல சுகம் பெற்று, வந்த பாடுகளைப் பார்த்துப் பின்வாங்காமல், எப்படியாவது இயேசுவை அறிவிக்க வேண்டுமென்று பிரயாணப்பட்டு மறுபடியும் அந்த மோட்டிலோன் பழங்குடியினரைச் சந்திக்கச் சென்றபோது, ஒரு புதருக்குப் பின்னால் ஐந்து பழங்குடி வாலிபர்கள் கையில் அம்புடன் நின்றதைக் கண்டார். அவர்களைப் பார்த்த ஒல்சன் பின்வாங்கினார். ஆனால் அவர்கள் ஒல்சன் தலைவனிடம் கூட்டிக்கொண்டுப் போனார்கள். ஒல்சன் மஞ்சள்காமாலை நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததினால் போகும் வழியிலேயே மயங்கி விழுந்தார். ஆனாலும்  தூக்கிக் கொண்டு தலைவனிடம் சென்றனர். அவனைக் கொல்லாமல் தானாகவே சாகட்டும் என அவர்கள் வாழும் மாபெரும் பந்தல் போன்ற வீட்டில் படுக்க வைத்தனர். மறுபடியும் அனைவரும் தூங்கும்போது அங்கிருந்து மெல்ல மெல்ல எழுந்து வெளியே வந்து விழுந்தார்.  வெட்ட வெளியில் ஒரு மனிதன் படுத்திருப்பதைக் கண்டு, விமானி ஒருவர் ஹெலிகாப்டரைக் கீழே இறக்கி அவரைக் காப்பாற்றினார். இதை ஒளிந்திருந்து பார்த்த அந்த மக்கள் ஆகாய ராட்சசக் கழுகு அவரைத் தூக்கிச் சென்று விட்டது என எண்ணினார்கள். அடுத்த வாரமே நல்ல சுகம் பெற்று அதே கிராமத்திற்குச் சென்று, அங்குக் கண்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து கொடுத்துச் சுகமானதும், அக்கிராமத் தலைவன் மற்றும் அங்கு வாழும் மக்கள் அவருக்கு நண்பர்கள் ஆனார்கள். இவருக்கு மரியாதை செலுத்தவும் ஆரம்பித்தார்கள்.



மோட்டிலோன் மக்கள் டிபோடிபோ என்ற கடவுளை வணங்கி வந்தனர். அவர் நட்சத்திரங்களுக்குப் பின்பு உள்ள மகா பெரிய குடிசையில் வாழ்கிறார் என்பது தான் அவர்களது நம்பிக்கை. ஓல்சன் டிபோடிபோவை வைத்து, கடவுள் மிகவும் அன்பானவர், அவர் மோட்டிலோன் மக்களுடன் வாழ ஆசைப்படுகிறார், எனவே தன்னுடைய குமாரனாகிய கிறிஸ்து இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார், அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்தார், நீங்கள் பாவங்களை அறிக்கையிட்டு அவரை ஏற்றுக்கொண்டால் டிபோடிபோவின் குடிசைக்குச் செல்லலாமெனச் சொல்லி மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆண்டவர் பக்கம் திருப்பி வந்தார்.

அவரது பிரசங்கத்திற்கு உடனடியாக விளைவைக் காண முடியவில்லை. அவர்களுக்கு அவர்களது தீய பழக்கவழக்கங்களைச் சுட்டிக்காட்டி இப்படிச் செய்வது கடவுளுக்குப் பிடிக்காது எனக்கூறி பாவத்தை உணர்த்தினார். படிப்படியாக அவருடைய சொல்லிற்கு அம்மக்கள் கீழ்ப்படிந்தனர். முதன் முறையாக ஒல்சனை அம்பெய்து கொல்ல முயன்ற வாலிபன் கொராய்ரா மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டான்.  அவனைத் தொடர்ந்து ஏராளமான மோட்டிலோன் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர். ஒல்சனின் 28 ஆண்டுகாலப் பணிகளின் மூலம் 10 இடங்களில் சுகாதார நிலையங்களும், 15 வேளாண்மைத் துறை மையங்களும், 8 இடங்களில் விளைபொருள் விற்பனைச் சந்தைகளும், 12 பள்ளிகளும், பல ஆலயங்களும் நிறுவப்பட்டன.

அன்பான வாலிபர்களே! எத்தனை முறை அம்பால் குத்தப்பட்டாலும், நோய்வாய்பட்டாலும், தன் ஜீவனை வெறுத்து பயமின்றி, இயேசு கிறிஸ்துவின் அன்பை மோட்டிலோன் பழங்குடியினருக்கு எடுத்துச் சொல்லி அம்மக்களை கிறிஸ்துவிடம் வழிநடத்தி இன்று, 83 வயது இளைஞராக, புரூஸ் ஒல்சன், பாரி மக்களிடையே மட்டுமல்ல, கொலம்பிய காடுகளில் உள்ள ஏராளமான பழங்குடி மக்கள் மத்தியில்  ஊழியத்தில் தீவீரமாக இருக்கிறார். ஆண்டவர் மீது இருந்த விசுவாசமும், அவருடைய கீழ்ப்படிதலும் ஒல்சனை ஒரு சாதனையாளனாக மாற்றியது. அர்ப்பணமிருந்தால் நீங்களும் தேவனால் வல்லமையாய்ப் பயன்படுத்தப்பட முடியும்.

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில்
அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து
பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன்
அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த
ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (3RD AUG)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor,
Tiruchendur Road,
Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

## EVERY 2ND SATURDAY (9TH AUG)

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre,
57/2 Thomasappa layout (Opp)
Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

## EVERY 2ND SUNDAY (10TH AUG)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School
(Near Railway Station), Room No.10,
Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street, Salem Road,
Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto,
1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3RD SATURDAY (16TH AUG)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, \
71, Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 3RD SUNDAY (17TH AUG)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam 2.
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex,
#43/R4, Rajendra Nagar,
Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor,
Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God,
Nalumavadi
9442885315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction,
Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4TH SUNDAY (24TH AUG)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor, 305/E,
Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845, 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop]
41, K.Salai pudur Byepass Road,
Madurai
9750955548

உங்கள் பகுதியில் நடைபெறும்
Fellowshipல் தவறாமல்
கலந்து கொள்ளுங்கள்;
எழுப்புதலைப் பற்ற
வைப்போர்களாய் மாறுங்கள்!

நிகழ்வு: ஜெயசீலன்

# நான் ஒரு ஜெப வீரன்





எனக்கு மிகவும் பிரியமான தம்பி, தங்கச்சி!

கடந்த 6 மாதங்களாக நான் ஒரு ஜெப வீரன் என்ற தலைப்பில் மன்றாட்டின் ஜெபம், வேண்டுதல் ஜெபம், கண்ணீரின் ஜெபம், உபவாச ஜெபம், பரிந்து பேசும் ஜெபம், போராட்ட ஜெபம் என பலவிதமான ஜெபங்களைக் குறித்துப் பார்த்தோம். இந்த மாதம் எலியா எப்படி கருத்தாய் ஜெபித்தார், எதற்காக ஜெபித்தார், அவரின் கருத்தான ஜெபத்திற்கு பதில் வந்ததா என்பதை பற்றி நாம் பார்க்கப் போகிறோம்.

## கருத்தான ஜெபம்

**எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை (யாக்கோபு 5:17).** எலியா தீர்க்கதரிசி நம்மைப் போலச் சாதாரண மனிதனாக இருந்த போதிலும், அவர் ஜெபித்தபோது, மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம்.

எலியா பெரிய ஜெபம் பண்ணவில்லை. அவருடைய ஜெபம் சுருக்கமாக இருந்தாலும், கருத்தாக ஜெபித்தார். தேவன் அந்த ஜெபத்தை கேட்டுப் பதில் கொடுத்தார்.

**"...இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான்"** (1இராஜா. 18:36-37).

பாகாலின் நானூற்று ஐம்பது தீர்க்கதரிசிகளுக்கு முன்பாக ஒரே மனிதனாக நின்று எலியா தீர்க்கதரிசி, ''கர்த்தரே தேவன்'' என்பதை நிரூபிக்கும்படி ஒரு சிறிய ஜெபத்தைத்தான் செய்தார். ஆனால் அது கருத்துள்ள ஜெபமாக இருந்தது. அவர் அப்படி ஜெபித்து முடித்தவுடன் **'அப்பொழுது: கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது'** (1 இராஜா. 18:38) என்று வாசிக்கிறோம். நம்முடைய ஜெபங்களும் சுருக்கமாய் இருந்தாலும், கருத்துள்ளதாக இருக்க வேண்டும். நீண்ட ஜெபம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதற்காக எல்லா நேரங்களிலும் சுருக்கமாக இருக்க வேண்டும் என்றும் அர்த்தம் அல்ல. சுருக்கமாய் இருந்தாலும், கருத்தாய், விசுவாசமாய், தேவன் மேல் முழு நம்பிக்கை வைத்து ஜெபிக்கும்போது தேவனிடமிருந்து நிச்சயமாய் பதிலைப் பெற்றுக் கொள்ள முடியும்.



எலியா, தீர்க்கதரிசியாக இருந்தாலும், அவரும் உபத்திரவத்தின் பாதையில், பஞ்சத்தின் பாதையில் கடந்து சென்றார். ''போதும் ஆண்டவரே, என் உயிரை எடுத்துக்கொள்ளும்'' என்ற நிலைக்கு எலியா தள்ளப்பட்டார். அவ்வளவாக யேசபேலினிமித்தம் அவருக்குப் பயமுறுத்தல்கள் வந்தது. காரணம், எலியா நம்மைப் போலப் பாடுள்ள மனுஷனாய் இருந்தாலும், தேவன் எலியாவை விடவில்லை, எலியாவும் தேவனை விடவில்லை.

**எலியா விசுவாசமுள்ளவர்:** விசுவாசத்தோடு இறந்துபோன பிள்ளையை உயிரோடு எழுப்பினார்.


**எலியா கீழ்ப்படிதலுள்ளவர்:** ஆண்டவர் பஞ்சம் வந்தபோது நதியோரத்தில் போய்த் தங்கியிரு என்று சொல்லும்போது, அதற்குக் கீழ்ப்படிந்தார். விதவையின் வீட்டில் போய்த் தங்கியிரு என்று சொல்லும்போது, அதற்கும் கீழ்ப்படிந்தார்.

**எலியா தைரியமுள்ளவர்:** பாகால் தெய்வமானால் பாகாலை சேவியுங்கள், கர்த்தர் தெய்வமானால் கர்த்தரை சேவியுங்கள் என்று ஜனங்களுக்கு முன்பாகவும் ஆகாப் இராஜாவுக்கு முன்பாகவும் கர்ச்சித்தவர்.

**எலியா மிகப்பெரிய ஜெப வீரன்:** மழை பெய்யாதபடிக்கும், மழை பெய்யும்படிக்கும் கருத்தாய் ஜெபித்தார். ஆண்டவர் அவருடைய ஜெபத்தை கேட்டார். எலியா வானத்திலிருந்து அக்கினியை இறக்கியவர், பல அற்புதங்களைச் செய்தவர், இராஜாவையும் எதிர்த்து நிற்கத் தயங்காதவர், பாகால் தீர்க்கத்தரிசிகளை ஒன்றுமில்லாமலாக்கி போட்டவர், ஆவியானவருடைய அபிஷேகத்தினால் நிரம்பியவர், மிகப்பெரிய தீர்க்கதரிசியென்று அழைக்கப்பட்டவர்.

## எலியா ஜெபித்த ஐந்து ஜெபங்கள்:

✦ இஸ்ரவேல் மக்கள் பாகாலை வணங்கியபோது தேசத்தில் மழை பெய்யாமல் இருக்கும்படி எலியா ஜெபம் செய்தார். தேவன் பதில் கொடுத்தார். (யாக். 5:17).



✦ மழை பெய்யாததினால் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்ச காலத்தில் தனக்கு உதவின சாரிபாத் விதவையின் மகன் மரித்தபோது உயிர் வர எலியா மூன்று முறை ஜெபம் செய்தார். தேவன் உயிர் கொடுத்தார் (1 இராஜா.17: 21-22).

✦ கர்த்தர் தெய்வமா பாகல் தெய்வமா என்ற சூழல் உருவாகியபோது கர்த்தரே தேவன் என்று இஸ்ரவேல் மக்கள் காணும்படி எலியா ஜெபம் செய்தார். தேவன் அக்கினியால் பதில் கொடுத்தார் (1இராஜா.18:36-37).

✦ தேசத்தில் மழை பெய்யும்படி முழங்காலில் குனிந்து எலியா ஏழு முறை ஜெபம் செய்தார். தேவன் மழையை பெய்ய பண்ணினார் (1 இராஜா. 18:42-45).

✦ யேசபேல் கொலை செய்ய ஆட்களை அனுப்பியபோது, போதும் கர்த்தாவே என் உயிரை எடுத்துக் கொள்ளும் என்று எலியா ஜெபித்தார். தேவன் எலியாவுக்கு பதில் கொடுக்கவில்லை. உயிரையும் எடுக்கவில்லை. மாறாக உயிரோடு பரலோகம் எடுத்துக் கொண்டார் (1 இராஜா. 19:4).



*அன்பான வாலிபர்களே!*
*எலியா ஜெபித்த ஐந்து கருத்துள்ள ஜெபங்களுக்கும் தேவன் பதில் கொடுத்தார்.*
*எலியாவைப் போல மேலான காரியங்களைப் பெற்றுக்கொள்ள கருத்தாக ஜெபித்தால், நம்முடைய ஜெபங்களுக்கும் நிச்சயம் தேவன் பதில் அளிப்பார்.*

# மவுண்ட் சீனாய்

**வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச கூடுகை!**

**நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை**

நாள்: 2025
அக்டோபர்
20 (அரசு விடுமுறை)
திங்கள்கிழமை

தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்டிரா, பாண்டிச்சேரி, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் 36 இடங்களில் நடைபெற இருக்கிறது.



**சென்னை மண்டலம்**
திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட், வேலூர், இராணிபேட் பேர்ணாம்பட்

**கோவை மண்டலம்**
திருப்பூர், கோவை, ஈரோடு, பொள்ளாச்சி, காங்கேயம், உடுமலைப்பேட்

**திருச்சி மண்டலம்**
தஞ்சாவூர், திருச்சி, கரூர்

**கடலூர் மண்டலம்**
பாண்டிச்சேரி, திண்டிவனம்

**சேலம் மண்டலம்**
நாமக்கல், சேலம், திருப்பத்தூர்

**மதுரை மண்டலம்**
தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், திண்டுக்கல்,

**திருநெல்வேலி மண்டலம்**
ஜெபமலை, திருநெல்வேலி, கோவில்பட்டி, நாலுமாவடி, சங்கரன்கோவில், நாகர்கோவில்

**ஆந்திரா மண்டலம்**
சித்தூர், திருப்பதி

**கர்நாடகா மண்டலம்**
பெங்களூர்

**கேரளா மண்டலம்**
திருவனந்தபுரம்

**பெற்றோர்களே!**
உங்கள் பகுதியில் நடைபெறும் வாலிபர் உபவாச கூடுகைக்கு உங்கள் பிள்ளைகளை அனுப்பி வையுங்கள்.

**அந்த நாளில் தேசத்தை ஜெப மேகத்தால் மூடிடுவோம்.**
**வாருங்கள் இணைந்து ஜெபிப்போம்.**

தொடர்புக்கு : சென்னை, கோவை 9488475315 | மதுரை, திருநெல்வேலி 9750955548 |
திருச்சி 9489775075 | சேலம், கடலூர், ஆந்திரா 9791444788 |
கேரளா 0471 - 2331392 , 9249718266,

## சூளைக்குள் இறங்கிய 3 நண்பர்கள்

பாபிலோனின் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், ஒரு பெரிய பொற்சிலையை உண்டாகி, அதை வணங்கும்படி கட்டளையிட்டான். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோர் தேவனை மட்டுமே வணங்குபவர்கள் என்பதால், அவர்கள் அந்தச் சிலையை வணங்க மறுத்துவிட்டார்கள். இதனால் கோபமடைந்த இராஜா அக்கினி சூளையை 7 மடங்கு சூடாக்கி 3 பேரையும் கட்டி அதில் போட வைத்தான். அவர்களைச் சூளையில் போடப் போன போர்வீரர்கள் தீயில் கருகி இறந்தனர். ஆனால், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூவரும் அக்கினிக்குள் பாதுகாப்பாக இருந்ததைக் கண்ட இராஜா ஆச்சரியப்பட்டான். சூளைக்குள் நான்காவதாக ஒருவர் தேவதூதனைப் போல இருந்ததினால் அவர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை என்பதையும் பார்த்த இராஜா சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோரை அக்கினி சூளையிலிருந்து வெளியே வர உத்தரவிட்டான். மேலும் அவர்கள் தேவனை ஜனங்கள் அனைவரும் வணங்கும்படி செய்தான். (தானியேல் 3ஆம் அதிகாரம்)




*அன்பானவர்களே! நண்பர்கள் ஒரே மனதோடு கர்த்தரை விசுவாசித்து இராஜாவிற்கே பயப்படாமல் உறுதியாய் இருந்ததினால் அவர்கள் தேவனே தேவன் என்று இராஜாவும் கர்த்தரை பணிந்து கொள்ள உதவிற்று.*



## நற்செய்தி சொன்ன 4 நண்பர்கள்

சீரியா தேசத்து ராஜா இஸ்ரவேல் ராஜாவுக்கு எதிராக வந்து சமாரியா பட்டணத்தை முற்றுகை போட்டான். அதினால் சமாரியாவிலே கொடிய பஞ்சம் உண்டாயிற்று. நான்கு குஷ்டரோகிகள் பட்டணத்திற்கு வெளியே உணவு கிடைக்காமல் தவித்துக்கொண்டிருந்தார்கள். இங்கு உணவு இல்லாமல் சாவதை விட எதிரிகளின் இராணுவத்திற்கே போவோம். அவர்கள் நம்மை உயிரோடு வைத்தால் வாழ்வோம். இல்லாவிட்டால் சாவோம் என்று துணிந்து பாளையத்தின் முன்னணி மட்டும் வந்தபோது ஒரு கூடாரத்திற்குள் பிரவேசித்துப் புசித்துக் குடித்து, அதிலிருந்து வெள்ளியையும் பொன்னையும் வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு போய் ஒளித்துவைத்து, திரும்பி வந்து, வேறொரு கூடாரத்திற்குள் பிரவேசித்து, அதிலிருந்தும் அப்படியே எடுத்துக்கொண்டு போய் ஒளித்துவைத்து அதன் பின் தான் தாங்கள் செய்வதைக் குறித்து யோசிக்க ஆரம்பித்தார்கள். "பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மௌனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள் என்று கூறி அந்த நற்செய்தியை அறிவிக்க இரவோடு இரவாகச் சென்றார்கள் (2 இராஜாக்கள் 7:1-15).



*அன்பானவர்களே! இந்தக் குஷ்டரோகிகளைப் போல நாமும் மற்றவர்களுக்கு நம்மால் இயன்ற நற்செய்தியை எவ்விதத்திலாகிலும் சொல்ல முற்படுவோம்.*

# செய்திகள்

## நாடு முழுவதும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் தபால் நிலையங்களில்

## யுபிஐ மூலம் கட்டணம் செலுத்தும் முறை அறிமுகம்!




பணப்பரிவர்த்தனைகளை நவீனமயமாக்கும் மற்றொரு முயற்சியாக நாடு முழுவதும் தபால் நிலையங்களில் டிஜிட்டல் முறையில் கட்டணம் செலுத்தும் முறை அறிமுகம் செய்யப்பட உள்ளது. இந்தியாவில் கிட்டத்தட்ட 1.55 லட்சம் தபால் நிலையங்கள் இருக்கின்றன. இவைகள் பெரும்பாலும் கிராம பகுதிகளில் உள்ளன. இந்திய தபால் துறை இன்றைய தொழில்நுட்பத்திற்கு ஏற்பப் பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. அது நேரம் நாட்டில் யுபிஐ மூலமாகப் பணப் பரிவர்த்தனை செய்யும் முறை பன்மடங்கு அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் பெரும்பான்மை மக்களால் பயன்படுத்தப்படும் தபால் நிலையங்களில் யுபிஐ டிஜிட்டல் பரிவர்த்தனையை நடைமுறைப்படுத்த தபால் துறை திட்டமிட்டு இருந்தது.

இதற்கான சோதனை முயற்சி கர்நாடக மாநிலம் மைசூர் பாகல்காட் பகுதிகளில் உள்ள தபால் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சோதனை முயற்சியில் வெற்றி அடைந்ததை அடுத்து வரும் ஆகஸ்ட் 1ம் தேதி நாடு முழுவதிலும் உள்ள தபால் நிலையங்களில் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை முறை புழக்கத்திற்கு வர உள்ளது. புதிய நடைமுறையின் கீழ் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் தபால் நிலைய கவுண்டர்களின் கியூ ஆர் கோட் குறியீட்டை ஸ்கேன் செய்து மக்கள் கட்டணங்களைச் செலுத்தலாம். இங்கு வரும் மக்கள் பேடிஎம், கூகுள் பே, போன் பே மூலம் யுபிஐ செயல்களைப் பயன்படுத்தலாம்.

**- தினகரன் ஜூன் 30, 2025.**

## ஆயிரக்கணக்கானவர்கள் பணி நீக்கம்: மைக்ரோசாப்ட் மீண்டும் அதிரடி!

முன்னதாகக் கடந்த ஜனவரி மாதம் ஒரு சதவீத ஊழியர்களைப் பணிநீக்கம் செய்தது மைக்ரோசாப்ட் நிறுவனம்.

கணினி தொழில்நுட்ப நிறுவனமான மைக்ரோசாப்ட், இந்த ஆண்டில் 4-வது முறையாக மீண்டும் ஊழியர்கள் பணிநீக்க நடவடிக்கையை மேற்கொண்டு உள்ளது. நேற்று ஏராளமானவர்களுக்கு பணிநீக்க நோட்டீசுகளை அனுப்பத் தொடங்கியது. எவ்வளவு பேர் பணிநீக்கம் செய்யப்படுகிறார்கள் என்று அந்த நிறுவனம் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. முன்னதாகக் கடந்த ஜனவரி மாதம் ஒரு சதவீத ஊழியர்களைப் பணிநீக்கம் செய்தது. கடந்த மே மாதத்தில் மேலும் 6 ஆயிரம் பேரும், கடந்த ஜூன் மாதம் 305 பேரும் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் ஜூலை 2 ஆம் தேதி மீண்டும் வெளியான பணிநீக்க அறிவிப்புகள் அதன் ஊழியர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. புளூம்பெர்க் நிறுவன அறிக்கையின்படி இந்த முறை மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் 9 ஆயிரம் பேர் பணி நீக்கம் செய்யப்படலாம் என்று தெரியவருகிறது.

**- தினத்தந்தி - ஜூலை 3, 2025.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# கிறிஸ்தவம்

*Revival:*
*The act of becoming or making something strong or popular again.*

தகவல்: எப்சிபா




## அன்றைய எழுப்புதல்:

ஒரு ஊழியர் தன்னை சுற்றி வட்டம் வரைந்து, ஆண்டவரே, எங்கள் தேசத்தில் எழுப்புதலை மூட்டும் ஆனால் அதற்கு முன்பு முதலில் இந்த வட்டத்தினுள் எழுப்புதலைத் தாரும் என ஜெபித்தாராம். அவர் ஜெபித்தபடியே ஆண்டவர் செய்தார். பின் நாட்களில், அவரது ஊழியத்தின் மூலம் முழுத் தேசமே எழுந்தது!




## ஆனால் இன்று?

நாம் எழுப்புதலுக்காக ஜெபிக்கிறோம்... ஆனால் எழுப்புதல் உண்மையில் என்ன என்பதை மறந்து விடுகிறோம்.

அப்போஸ்தலர் நாட்களில், இயேசுவை பின்பற்றுவது மரண தண்டனையை உண்டாக்கும் நிலை! ஆனால் அதுபோல அபாயம் நிறைந்த சூழ்நிலையிலும், சீஷர்கள் ஒருமனப்பட்டு ஜெபித்தபோது தேவன் பதிலளித்தார்; பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்; ஒரே நாளில் 3000 பேர் இரட்சிக்கபட்டார்கள்!



எழுப்புதலுக்கு முதலாவது நமக்குள்ளே ஒருமனம் தேவை. இன்று நம்மால் ஒரு மணி நேரம் கூட ஒருமனப்பட்டு ஜெபிக்க முடியவில்லை, மற்றவர்களோடு எப்படி ஒருமனப்படுவது? ஓரிடத்தில் கூடுவது?

நமக்குள் இருக்கும் 'ஒருமனம்' : ''என் பிரச்சனைகள் தீரவேண்டும்... நான் நலமாக இருக்க வேண்டும்'' இது ஒரு தனிப்பட்ட மனம்.

ஆனால் எழுப்புதலுக்கான ஒருமனம் என்பது: ''தேவனை அறியாமல் இருளுக்குள் இருக்கும் ஜனங்கள், நரகத்தை நோக்கி செல்லும் ஜனங்கள் ஜீவ வழியாம் இயேசுவை அறிந்து நலமுடன் வாழ வேண்டும் என்பதே!
எழுப்புதல் முதலில் நம்மிடம் தொடங்கட்டும்! ஆதி அப்போஸ்தலரின் அனுபவங்கள் மீண்டும் நம்மில் துவங்கட்டும்..!

*Let God influence us, rather than the world and trends..!*
*Let the Holy Spirit flame us and Jesus alone be famous...!*

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 07 -2025
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

